**உதயன்**

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 19 செவ்வாய்க்கிழமை (03-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:252



யாழ்.செயலகம் முன்பாக நேற்று மறியற்போரில் ஈடுபட்ட பட்டதாரிகளையும் யாழ். அரச அதிபரிடம் பட்டதாரிகள் சங்கச் செயலாளர் என்.பிரபாகரன் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம். எம்.பிக்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படங்கள்: தீபன்)

### நியமனக் குளறுபடிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து

# யாழ்.செயலகம் முன்பாக நேற்று பட்டதாரிகள் மறியல் போராட்டம்!

## அம்பாறையில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட்3

**பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்குவதில் தமிழ், முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர் எனத் தெரிவித்து, அதை ஆட்சேபித்து அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில், யாழ்ப்பாணத்தில் யாழ். செயலகம் முன்னால் மறியற் போராட்டம் நடைபெற்றது.**

பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்குவதில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுவது தொடர்பாக மக்கள் எதிர்ப்பு வலுத்துவருகின்றது.

தமது அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்த ஐக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்கள் பிரதேச செயலர் ரீதியாகப் பதிவுசெய்யும் பணி இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இடம் பெறவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் அலுவலகங்களிலும் தமது சங்கப் பிரதிநிதிகள் பிரசன்னமாகியிருப்பர் என்றும் -

பட்டதாரிகள் தமது பட்டம் செல்லுபடியாகும் காலத்தினை அவர்களிடம் பதிவுசெய்து உறுதிசெய்யும் படியும் -

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

பட்டதாரிகள் பயிலுநர் பதவிக்கு பத்திரிகையில் பெயர் விவரம் அறிவிக்கப்பட்டவர்கள் உட்படச் சகல பட்டதாரிகளையும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கம் கேட்டுள்ளது. (ஒ-3)

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் ஏழாவது வினாத்தாள் நாளைய உதயனுடன் வெளிவருகின்றது.

பிரதி புதன்கிழமைகள் தோறும் தொடர்ந்து வினாத்தாள்கள் வெளிவரும். வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 'உதயன்' பணிமனையில் அலுவலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர் ஊடுருவல்

வடமராட்சி,ஓக.3

வடமராட்சி கடற்பரப்பில் ஊடுருவி, இந்திய மீனவர்கள், பருத்தித்துறை மீனவர்களின் மீன்பிடி வலைகளை அறுத்துச் சேதமாக்கியுள்ளனர் என வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக வடமராட்சிக் கடலில் இந்திய இழுவைப் படகுகள் ஊடுருவி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இதனைக் கடற்படையினர் கண்டும் காணாததுபோல ஒதுங்கிச் செயற்படுகின்றனர் எனவும் மேற்படி கடற்றொழிலாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வாறு நூற்றுக்கணக்கான இந்தியப் படகுகள் மீன் பிடியில் ஈடுபட்டு வருவதுடன் அவர்களின் நடவடிக்கைகளால் இலங்கை மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் மோகன் கொலை: விடுதி உரிமையாளரிடம் பொலீஸ் விசாரணை

கொழும்பு, ஓக.3

புளொட் மோகன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வரும் சந்தேக நபர் தங்கியிருந்தார் எனக் கூறப்படும் விடுதியின் உரிமையாளரைப் பொலீஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

பொலீஸாரால் தேடப்படும் நபர் கடந்த 30

(16 ஆம் பக்கம் பார்க்க)

## காணிகளுக்கு பிரத்தியேக இலக்கங்கள் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறை

யாழ்ப்பாணம்,ஓக.3

காணிகளுக்குப் பிரத்தியேக இலக்கங்கள் வழங்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் உறுதிகளைப் பதிவுசெய்யும் திட்டம் யாழ்.மாவட்டத்தில் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அநுராதபுரத்தில் சமீபத்தில் இடம்பெற்ற உயர்மட்ட மாநாடொன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் கலந்து கொண்டிருந்தார்.

கடந்தகால யுத்த அனர்த்தங்கள் காரணமாகப் பலகாணிகளின் எல்லைகள் அழிந்தமை, பலரும் இடம்பெயர்ந்தமை, ஆவணங்கள் காணாமற்போனமை உள்ளிட்ட பல காரணங்களால் காணிப்பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. சொரியல் மற்றும் ஆட்சி தொடர்பாகவே பெரும்பா

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணையாளரின் கண்காணிப்பிலேயே தற்கொலைக் குண்டுதாரிக்கு அ.அட்டை

### நீதிமன்றில் பொலீஸார் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.3

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் குண்டை வெடிக்கச்செய்து உயிரிழந்த தற்கொலைக் குண்டுதாரிக்கும் அவருக்கு உதவியவருக்கும் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளரின் தனிப்பட்ட கண்காணிப்பின்கீழ் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் 19 பக்கம் கொண்ட விசாரணை அறிக்கையைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வைப் படுகொலை நினைவுத்தூபி நேற்றுத் தீருவிலில் திறந்துவைப்பு

கரவெட்டி,ஓக.3

இந்திய அமைதிப்படையினரால் 1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் படுகொலை செய்யப்பட்டவர்களான 63 தமிழர்களின் நினைவாக பொதுமக்கள் வல்வை தீருவில் மைதானத்தில் அமைத்த நினைவுத்தூபி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வல்வை விளையாட்டுக் கழகத் தலைவர் மு.தங்கவேல் தலைமையில் திறப்புவிழா நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக பிற்பகல் 4 மணிக்கு மருதடிச் சந்தியிலிருந்து நினைவுத்தூபி வரை நினைவு ஊர்வலம் இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இதில் பங்

(16 ஆம் பக்கம் பார்க்க)



'வல்வைப் படுகொலை' நினைவாக தீருவிலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி திறப்பு விழாவில் பொதுச்சுடர், தேசியக் கொடி ஆகியவை ஏற்றப்படுவதையும் திரைநீக்கம் இடம்பெறுவதையும் நினைவுத்தூபியையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நல்லூர் சட்டநாதர் ஆலயமருகே உள்ள பாலகதிர்காமம் கோவிலின் ஆடி வேல் பவனி நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:தீபன்)

# உசனில் உள்ள இராணுவ முகாமை அகற்றும் வாய்ப்பு இப்போது இல்லை

## பிரதேச செயலருக்கு படைப் பொறுப்பதிகாரி கடிதம்

தென்மராட்சி,ஓக.3

தென்மராட்சி உசன்பகுதிக் குடியிருப்புகளில் தங்கியுள்ள படையினர் உடனடியாக வெளியேற வாய்ப்பு இல்லை என 55ஆவது படையணித் தளபதி தென்மராட்சி பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

இப்பகுதி குடியிருப்புகளில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றி தாம் அங்கு மீளக் குடியமர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் கோரிவந்தனர். தமது கோரிக்கையை வலியுறுத்தி நாளைமறுதினம் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடப் போகின்றோம் என்றும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் படையணித் தளபதி மேற்படி கடிதத்தை பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

படைமுகாம்களை மாற்றுவது தொடர்பான உத்தரவினை இராணுவ உயர்பீடமே வழங்க வேண்டும். அத்துடன், உசன் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உத்தரவு கிடைத்து அதன் பினனர் அதற்கான இடவசதி ஏற்படுத்தப்பட்ட பின்னரே குடியிருப்புக்களில் இருந்து படையினரை வெளியேற்றமுடியும்.

பொதுமக்கள் போராட்டம் நடத்துவதால் எதுவித பலனும் உடனடியாகக் கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது. இந்த நிலையில் மேலிடத்து உத்தரவு கிடைத்து படையினர் வெளியேறும் வரை போராட்டத்தில் ஈடுபடவேண்டாம என அப்பகுதி குடியிருப்பாளர்களுக்கு கிராம அலுவலர் மூலம் அறிவிக்கவும் - இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)

## யாழ்.பல்கலைக்கழகப் பதில் பதிவாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளராக பரீட்சைகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திருமதி அனுசா சிவனேஸ்வரன் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதிவாளராகக் கடமையாற்றிய திருமதி என் தங்கர்ாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை இடம்பெற்று வருகிறது. இதனடிப்படையில் பேரவையின் தீர்மானப்படி பல்கலைக்கழகப் பதிவாளர் பதவியில் இருந்து அவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து அப்பொறுப்பை ஏற்குமாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மற்றும் உதவிப் பதிவாளர்கள் கேட்கப்பட்டிருந்தனர். ஆனால், அதனை ஏற்க எவரும் முன்வரவில்லை. இதனால், பதிவாளர் மேற்கொண்ட பணிகள் துணைவேந்தரின் மேற்பார்வையில் சிரேஷ்ட மற்றும் உதவிப் பதிவாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை கூடிய பேரவை யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளராக திருமதி அனுசா சிவனேஸ்வரனை நியமிப்பது என்று தீர்மானித்திருந்தது. இதனை அடுத்தே அவர் பதில் பதிவாளராக நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதில் பதிவாளர் பணியுடன் தற்போது கடமையாற்றும் பரீட்சைகள் அலகுக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராகவும் அவர் கடமையாற்றுவார். (ஒ-5)

# வங்கி ஊழியர் போராட்டத்துக்கு வர்த்தக சம்மேளனம் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஓக.3

மக்கள் வங்கியின் மானிப்பாய் கிளை காசாளர் எஸ்.பஞ்சலிங்கம் கொலையைக் கண்டித்து நாளை வங்கிப் பணியாளர்கள் மேற்கொள்ளவுள்ள கறுப்புப்பட்டிப் போராட்டத்திற்கு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் ஆதரவு தெரிவித்துள்ளது.

மானிப்பாய் மக்கள் வங்கிக் கிளையின் காசாளர் எஸ்பஞ்சலிங்கம் கடந்த 22 ஆம் திகதி கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இதனைக் கண்டித்து நாளை யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம், யாழ். மாவட்ட தேசிய ஊழியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை ஆகியவை இணைந்து கறுப்புப் பட்டிப் போராட்டம் நடத்துகின்றன.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மானிப்பாய் மக்கள் வங்கிக் கிளையின் காசாளர் எஸ்.பஞ்சலிங்கம் படுகொலை செய்யப்பட்டதனை யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது என்றும் -

இதனையிட்டு மக்கள் வங்கியினரால் நாளை புதன்கிழமை நடத்தப்படவுள்ள கறுப்புப்பட்டிப் போராட்டத்தினை சகல வர்த்தகரும் ஆதரித்து அன்றையதினம் கறுப்புப்பட்டி அணிந்து தமது கடமைகளில் ஈடுபடுமாறும் - அந்த அறிக்கையில் வேண்டுகோள்விடப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்போராட்டம் குறித்து யாழ். மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை அனைத்து வங்கிகளின் ஊழியர்களும் கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபடவேண்டும். அன்றையதினம் முற்பகல் 10மணி தொடக்கம் 11 மணிவரை வங்கி அலுவல்களை இடைநிறுத்தி சுலோக அட்டைகளுடன் வங்கி ஊழியர் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கவேண்டும்.

அத்துடன், இப்படுகொலை தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும்படி வலியுறுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஒ-6)

## மாவீரர் நினைவாக உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.3

புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக்கழகம் தமது அங்கத்தவர்களான மாவீரர்களின் நினைவாக மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறை, யாழ்.உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் யாழ்.உதைபந்தாட்ட லீக், வலிகாமம் வடக்கு உதைபந்தாட்ட லீக் மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றைச் சேர்ந்த கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் புத்தூர்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என கழகத்தின் செயலாளர் க.பகீரதன் அறிவித்துள்ளார். (எ-5)

## மார்ச் நிவாரணத்தில் பால்மாவுக்குப்பதில் சிவப்புப் பச்சை அரிசி

தென்மராட்சி,ஓக.3

மார்ச் மாதத்துக்கான உலர் உணவு நிவாரணம் விரைவில் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

இம்முறை பால்மா பைக்கற்றுக்குப் பதிலாக சிவப்பு பச்சை அரிசி வழங்கப்படவுள்ளதாகவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் பலர் வலையில்?

## விரைவில் கைதுசெய்யப்படுவராம்

கொழும்பு,ஓக.3

ஆள்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரிகள் பலர் பொலீஸாரின் வலைக்குள் சிக்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது. அதி விரைவில் இவர்களில் பலர் கைதுசெய்யப்படலாம் என்று தெரிகின்றது.

தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தமது அறிக்கையை ஆணையாளரிடம் நேற்று சமர்ப்பித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் இதுவரை 50 பேருடைய வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது பல முக்கியமான இரகசிய ஆவணங்கள் காணாமற் போய் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சில அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், திணைக்களத்தின் ஆவணக் களஞ்சியத்தில் இருந்து காணாமற்போனவை எனக் கூறப்படும் ஆவணங்கள் எங்காவது மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அழிக்கப்பட்டு விட்டனவா என்பது இன்னும் கண்டறியப்படவில்லை.

இரகசியப் பொலீஸாரின் விசாரணை அறிக்கையின்படி பல உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்படலாம் எனத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (க)

## கல்விக் கழக யாழ்.மாவட்ட பொறுப்பாளர்

யாழ்ப்பாணம்,ஓக.3

தமிழீழ கல்விக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளராக கடந்த முதலாம் திகதி முதல் க.ஆர்வலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரைகாலமும் தென்மராட்சி வலயக் கல்விக் கழகப் பொறுப்பாளராக பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பொலீஸ் பதவி உயர்வுக் குழறுபடி இன்று நாடாளுமன்றத்தில் விவாதம்

## பிரச்சினையைக் கிளப்புகின்றது ஜே.வி.பி.

பொலீஸ் திணைக்களத்தில் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டுள்ள பொலீஸாரின் பதவிஉயர்வுகள் தொடர்பாக ஆளும் தரப்பில் உள்ள ஜே.வி.பியினர் இன்று நாடாளுமன்றத்தில் பிரச்சினை கிளப்பவுள்ளனர்.

அண்மையில் பொலீஸ் திணைக்களத்தில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பான விவாதம் ஒன்று, இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறும்.

ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவின் கோரிக்கையின் பேரில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதமாக இது இன்று இடம்பெறவுள்ளது.

அண்மையில் பொலீஸாருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளின் போது பல தில்லுமுல்லுகளும், மோசடிகளும் தவறுகளும் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படுகின்றது.

கிரிமினல்களுக்கும், மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கும், தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்களுக்கும் கூட பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

தகுதியும், திறமையும் உள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என ஜே.வி.பியினர் ஆரம்பம் முதலே குற்றம் சுமத்தி வந்தனர்.

ஒரு சாரார் பொலீஸ் ஆணைக்குழு மீதும், மறுசாரார் முன்னாள் பொலீஸ்மா அதிபர், முன்னாள் உள்துறை அமைச்சர் ஆகியோர் மீதும் குற்றம் சுமத்தினர். அதேவேளை, பொலீஸ்மா அதிபரும், பொலீஸ் ஆணைக்குழுவும் பதவி உயர்வுக்காகச் சமர்ப்பித்த பெயர்ப்பட்டியலில் ஜனாதிபதி மாற்றம் செய்துவிட்டார் என மற்றும் ஒரு பிரிவினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்விவகாரம் தொடர்பாக உண்மையான நிலைவரம் வெளிப்படுத்தப்படவேண்டும். பதவி உயர்வுகள் வழங்குவதில் இடம்பெற்ற தில்லுமுல்லுகளுக்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை இனங்காணவேண்டும் என்பதாலேயே இவ்விடயம் தொடர்பாகப் பகிரங்கமான விவாதம் நடத்தப்படவேண்டுமெனத் தாங்கள் கேட்கின்றார்கள் என விமல் வீரவன்ஸ எம்.பி. கூறினார்.

பொலீஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்ட பின்னரே பாதுகாப்பு நடவடிக்கைகள் ஓரளவு திருப்தி அளிக்கின்றன. அரசியல் தலையீடு இன்றி பொலீஸார் தமது கடமைகளைச் செய்ய முடிகின்றது. குறிப்பாகத் தேர்தல் காலங்களில் எந்த விதமான அச்சுறுத்தல்களும் இன்றி பொலீஸார் நேர்மையான தேர்தல் ஒன்றை நடத்த உதவினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் செல்வாகைப் பயன்படுத்தி சுதந்திர பொலீஸ் ஆணைக குழுவை அழித்தொழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொலீஸ் ஆணைக்குழு மேலும் பலப்படுத்தப்படவேண்டுமேயொழிய அதனை அழித்துவிட இடம்கொடுக்கமாட்டோம் என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.(க)

## சவூதியில் மரணமான இலங்கைப் பெண்!

கொழும்பு,ஓக.3

சவூதி அரேபியாவில் பணிப் பெண்ணாகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும் போது மரணமடைந்த திருமதி ஹசன் அலியார் புஹாரி ஐனுல் ஹிதாயா என்ற இலங்கைப் பெண்ணின் சடலத்தை ஒப்படைக்க அவரது உறவினர்களைத் தேடி அலைகிறது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்.

2002ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி உள்ளூர் முகவர் நிலையம் ஒன்றின் ஊடாக சவூதி அரேபியாவுக்குச் சென்ற இவர் அங்கு பணியாற்றிக் கொண்டு இருக்கும்போது மரணமானார்.

இறந்த பெண்ணின் கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசம் பிழையானது என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. எனவே இந்தப் பெண்ணின் உறவினர்களைத் தொடர்பு கொண்டு பெண்ணின் சடலத்தை ஒப்படைக்கும் பணியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஈடுபட்டுள்ளது.

இறந்தவரின் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வரும் முயற்சியிலும் அவரது குடும்பதுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளிலும் பணியகம் ஈடுபட்டுள்ளது.

மேற்படி பெண்பற்றிய விவரம் தெரிந்தவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## உதயன்

# மோசமடையும் பொருளாதார நிலை

"நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது துலாம்பரமாக வெளித்தோன்றியுள்ளது.

பொதுத்தேர்தல் முடிந்து நேற்றுடன் நான்கு மாதங்கள்தான் முடிந்துள்ளன. ஆனால், பொருள்களின் - குறிப்பாக அத்தியாவசியப் பொருள்களின் - விலைகள் ஐந்தில் ஒரு மடங்கு எகிறியிருக்கின்றது.

தலைநகர் கொழும்பு விலைகளின்படி பெற்றோல் லீற்றருக்கு 8ரூபா உயர்ந்துள்ளது. இது 18 சதவீத அதிகரிப்பு.

எரிவாயு (காஸ்) விலை எழுபது ரூபா உயர்ந்துள்ளது. இது சுமார் 15சதவீத உயர்வு.

அரிசி விலையில் பத்து முதல் இருபத்தைந்து சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சீனி, பருப்பு, தேங்காய் போன்றவற்றின் விலைகளும் பதினைந்து முதல் இருபது சதவீதம் வரை உயர்ந்திருக்கின்றன.

இந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் விலைவாசி மலையேறிய கதை இது.

வடக்கு - கிழக்கில் வசிக்கும் - தமிழர் தாயகத்தில் வாழும் - தமிழ் மக்களைப் பொறுத்தவரை, இதிலும் விட பெரும்விலை உயர்வுப் பாய்ச்சல்களையும் அத்தியாவசியப் பொருள்களின் மோசமான பற்றாக்குறை, தட்டுப்பாடுகளையும் அவர்கள் சந்தித்திருக்கின்றார்கள்.

யுத்தத்தாலும், அதையொட்டி இலங்கை அரசு தமிழ்ப் பிரதேசங்கள் மீது விதித்த பொருளாதாரத் தடை மற்றும் விநியோகத்துக்கு எதிரான கெடுபிடி ஆகியவற்றினாலும் தமிழர் தாயகம் எங்கும் விலைவாசி உயர்வும் பஞ்சம், பற்றாக்குறையும் ஏற்பட்டதை அவர்கள் அனுபவித்திருக்கின்றார்கள்; எதிர்கொண்டிருக்கின்றார்கள்; முகம் கொடுத்திருக்கின்றார்கள்; அவற்றைத் தாங்கியிருக்கின்றார்கள்.

ஆனால், இப்போது யுத்தம் இல்லை. சமாதானக் காலம். யுத்தத்துக்காக நாடும் அரசும் செலவிட வேண்டிய பல்லாயிரம் கோடி ரூபா நிதிகூட அபிவிருத்தி மற்றும் நாட்டின் பொருளாதார மேம்பாடு போன்றவற்றுக்குப் பயன்படுத்தக் கூடிய சாத்தியமான காலம்.

ஆனாலும், கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை ஆட்சிப் பீடத்தில் ஏற்றிய தவறுக்காக நான்கு மாதத்தில் பொருள்களின் விலைகள் ஐந்தில் ஒரு பங்கு ஏறும் நெருக்கடியான விலைவாசி உயர்வை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் முழு நாட்டினதும் மக்கள்.

யுத்தத்தின் நேரடிப் பேரழிவைச் சந்திக்காத தென்னிலங்கை மக்களுக்கு இந்தத் திடீர் விலைவாசி உயர்வு எதிர்பாராத வேதனை. இன்றைய யுத்த நிறுத்தத்தால் ஸ்திரமான பொருளாதார நிலைமையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தென்னிலங்கை மக்களுக்கு வேதனைக்கு மத்தியிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விவகாரம் இது.

இந்த அரசின் வழிநடத்தலில் யுத்தநிறுத்த காலத்திலேயே நிலைமை இவ்வாறு மோசமாக இருக்குமானால் யுத்தம் ஒன்று மீண்டும் வெடித்தால் நிலைமை எப்படியிருக்கும் என்பதைத் தென்னிலங்கைச் சிங்கள தேசம் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

அமைதி முயற்சிகள் - சமாதான நடவடிக்கைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டால் - முழு நாட்டையுமே கட்டியெழுப்பவும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, அபிவிருத்தி செய்யவும் 45 ஆயிரம் கோடி ரூபாவரை நிதியுதவி வழங்க சர்வதேச சமூகம் தயாராகக் காத்து நிற்கின்றது.

இது விடயத்தில், சர்வதேச சமூகத்தின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முடக்கி, காலத்தை இழுத்தடித்து, நாட்டுக்கும் மக்களுக்கும் இந்த உதவிகள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையாக தட்டிப்போக வழி செய்திருக்கிறது இந்த அரசு.

அது மட்டுமல்ல, அமைதி முயற்சிகளை முழுப் பேரினவாதத் திமிரில் கையாள்வதன் மூலம் அதைக் குழப்பி, மீண்டும் நாட்டில் பெரும் யுத்தம் வெடிக்கச் செய்வதற்குக் கங்கணம் கட்டி நிற்கின்றன அரசும் அதனை வழிநடத்தும் சக்திகளும்.

பேரினவாதத் திமிருக்கு அடிபணியும் அரசுத் தலைமையின் தற்போதைய போக்குத் தொடருமானால், இந்த யுத்தநிறுத்தம் கூட நின்று நிலைத்துத் தாக்குப்பிடிப்பது கேள்விக்குறியாகும். மீண்டும் யுத்தம் வெடிப்பது தவிர்க்க முடியாததாகும்.

இப்போது உயர்ந்ததை விட பல மடங்கு அப்போது விலைவாசி ஏறிப்பாயும். உண்மையான- நேர்மையான -ஆர்வத்துடனும் திறந்த மனதோடும் அமைதிமுயற்சிகளை அரசு ஆரம்பிப்பதே நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை நாட்டுக்குப் பெற்றுத்தரமுடியும்.

பேரினவாதிகளின் தயவில் நிற்கும் இந்த அரசினால் அது முடியுமா என்பதே கேள்வி.

# அமைச்சரவை அங்கீகரித்த திட்டத்துக்கு நிதி ஒதுக்கத் திறைசேரி பின்னடிப்பு

கொழும்பு,ஓக.3

யாழ். மாவட்டத்தில் அவசர புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியும் அதற்கான நிதியை வழங்கத் திறைசேரி பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். ஆஸ்பத்திரியில் அவசர விபத்துப் பிரிவு அமைத்தல், பிரதேச செயலகங்களுக்குக் கட்டடம் அமைத்தல், நெடுந்தீவுப் படகுச் சேவை உட்படப் பல திடடங்களை மேற்கொள்ள அவசர புனர்வாழவுத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இத்திட்டத்தை மேற்கொள்ள 60 கோடி ரூபா தேவை எனவும் மதிப்பிடப்பட்டது.

குடாநாட்டில் உள்ள பல்வேறு திணைகளத் தலைவர்களின் அபிப்பிராயங்களைப் பெற்று செயலகத்தினால் வகுக்கப்பட்ட இந்தத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரமும் பெறப்பட்டது. அத்துடன், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நிதி வழங்கும்படி திறைசேரி அதிகாரிக்குப் பணிப்புரையும் விடுக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி பல வாரங்கள் ஆகியும் இன்னமும் நிதி திறைசேரியால் ஒதுக்கப்படவில்லை.

செயலக அதிகாரிகள் திறைசேரியுடன தொடர்ந்து கலந்துரையாடியபோதும் இன்னமும் நிதி ஒதுக்கப்படவில்லை எனத் தெரியவந்தது. (எ-3)

# நாவாந்துறை வடக்கு, சோனகதெருவில் முறையற்ற வகையில் காணிகள் விற்பனை

## எச்சரிக்கின்றார் யாழ்.பிரதேச செயலாளர்

நாவாந்துறை வடக்கு (ஜே.85) மற்றும் புதிய சோனகதெரு (ஜே.88) கிரம அலுவலர் பிரிவில் உள்ள சில பகுதிகளில் முறையற்ற வகையில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி காணிகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் -

இது விடயத்தில் காணிகளைக் கொள்வனவுசெய்வோர் அவதானத்துடன் செயற்படவேண்டும் எனறும் - யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இது குறித்து பிரதேச செயலாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

நாவாந்துறை வடக்கு, புதிய சோனக தெரு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சூரியவெளி, பறைச்சேரி, இராசாலிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள முஸ்லிம் மற்றும் வேற்று மக்களுக்கு உரிமையான தனியார் காணிகளும் அரச குடியேற்றத்திட்டக்காணிகளும் தற்போது முறையற்ற வகையில் சிலரால் கொள்முதல் செய்யபடுகின்றன.

இந்த உரிமை மாற்றம் சட்டத்துக்கு முரணாகவும், உரிமையற்றவர்கள் சிலராலும் போலி ஆவணங்களைக் காட்டியும் மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே, காணிக் கொள்வனவு செய்வோரை இது விடயத்தில் பிரதேச செயலரையோ அல்லது அப்பகுதி கிராம அலுவலரையோ தொடர்புகொண்டு ஆவணங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (எ)

# சின்னமடுமாதா வருடாந்தப் பெருவிழா யாத்திரிகர்களுக்கு விசேட வசதிகள்

ஊர்காவற்றுறை,ஓக.3

கத்தோலிக்கர்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை, சின்ன மடுமாதா தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழா நாளை புதன்கிழமையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

பெருவிழாவில் பங்குபற்ற வருகைதரும் யாத்திரிகர்களின் வசதி கருதி பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என தேவாலயப் பரிபாலகர் வண.பீற்றர்துரைரத்தினமும் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகமும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7.30மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

மேற்படி தேவாலயத்தின் பெருவிழா தொடர்பான முன்னேற்பாட்டுக்கூட்டம் அண்மையில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பெருவிழாத் தொடர்பாகப் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

☆ நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சின்னமடு தேவாலயத்திற்கு தொடர்ச்சியாக விசேட பஸ் சேவைகள் நடத்தப்படும். அதேபோன்று தீவகத்தின் அல்லைப்பிட்டி, கரம்பன் கண்ணகை அம்மன்துறை ஆகியவற்றில் இருந்தும் ஆலயத்துக்கு விசேட சேவைகள் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

☆ தேவாலயத்துக்கு வருகைதரும் யாத்திரிகர்களின் நன்மைகருதி சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல். இதில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை பிரதான பணியை நிறைவேற்றும்.

☆ உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கும் பொருள்கள் ஆலயச் சூழலில் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

☆ சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் சேவைகளை தேவாலயச் சூழலில் ஏற்படுத்துவதுடன், சாரணர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

☆ மேற்படி இரு தினங்களும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் உற்சவகாலப் பணிமனையை தேவாலயச் சூழலில் இயக்குதல்.

மேற்படி கூட்டத்தில் தேவாலயப் பரிபாலகர் வண.பீற்றர் துரைரத்தினம், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் இ.பாலசிங்கம், யாழ்சாலை முகாமையாளர் மு.உதயகுமார், ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம், புளியங்கூடல் கிராம அலுவலர் மு.விஜயரத்தினம், பொதுச சுகாதாரப் பரிசோதகர் எஸ். காண்டீபன் மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (எ-16-30)

# கிராம சேவையாளர் வெற்றிடம் விரைவில் நிரப்ப நடவடிக்கை

## பொது நிர்வாக அமைச்சர் யாழ்.அரச அதிபரிடம் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராமசேவையாளர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கும யாழ்.செயலக அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலின் போது இது தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரத்தில் கடந்த வாரம் அமைசசருக்கும், செயலக அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

குடாநாட்டில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் பெரும்பாலான இடங்களுக்கு நிரந்தரமான கிராமசேவையாளர்கள் இல்லை. ஒருவர் பல பிரிவுகளில ஒரே நேரத்தில் பணிநிறைவேற்ற வேண்டியவராய் உள்ளார். இதன் காரணமாக புனர்வாழ்வுப்பணிகள் தாமதம் அடைகின்றன.

எனவே, பணிகளை விரைவாகவும், மக்களுக்கு நல்ல சேவையை வழங்கவும் கிராமசேவையாளர்களை நியமிக்க வேணடும் என்று யாழ்.அரச அதிபர் செ.பத்தமநாதன் பொதுநிர்வாக அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.

இதை ஏற்றுக் கொண்ட அமைச்சர், கிராம சேவையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்-

விரைவில் அதற்கான விண்ணப்பங்கள கோரப்படும் என்றும் கூறினார். (எ-3)

### நாளை

ஆடி 20
புதன்கிழமை
(04.08.2004)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 6.39 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் 1.30 வரை.
சுபநேரம்: 4.34 - 6.04
ராகுகாலம்: 12.04 - 1.34
(பழைய நேரப்படி)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் தீவகத்தில் புனரமைப்புப் பணிகள்

ஊர்காவற்றுறை,ஓக.3

வேலைக்கு உணவு என்ற அடிப்படையில் உலக உணவுத்திட்டத்தின் பிரிவு II இன் கீழ் ஊர்காவற்றுறை, காரைநகர், வேலணைப் பிரதேச செயலர் பிரிவுகளில் வீதிகள், மயானங்கள், குளங்கள் ஆகியன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்துவதற்கென அங்கீரிககப்பட்ட வேலைத்திட்டங்கள் யாழ். செயலகத்தினால் நிறைவேற்றப்படவேண்டிய திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இதற்கமைய ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் நிறைவேற்றப்படவுள்ள வேலைத்திட்டங்கள் வருமாறு:-

புளியங்கூடல் அம்மன் வீதி புனரமைப்பு, சுருவில் இந்து மயானமும் மயான வீதியும் புனரமைப்பு, காரைநகர் திக்கரை - தன்னை வீதி புனரமைப்பு, நாரந்தனை இந்து மயானமும் மயான வீதியும் புனரமைப்பு, சூரியவத்தை - புளியங்கூடல் இணைப்பு வீதி புனரமைப்பு ஆகியனவும் -

விவசாயத் திணைக்களத்தினால் ஊர்காவற்றுறை நுணிபுரம் குளம், வேலணை செட்டிபுலம் குளம் ஆகியனவும் புனரமைப்புச செய்யப்படவுள்ளன.

இவ்வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறு யாழ். செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம் மேற்படி திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளார். (எ-16)

### உதயவாக்கு

தான் விரும்புவதை எல்லாம் செய்பவன் வல்லவன். தான் செய்வதை விரும்புபவன் அறிவாளி.

**Computer courses**

Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
Diploma in Microsoft office 2003
Diploma in Computer Hardware Engineering

புதிய பிரிவு — ஆரம்பம் 07.08.2004

மேலதிக விபரங்களுக்கு:
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

# கசிப்பு உற்பத்தி செய்த பெண்ணை பொலீஸார் கைதுசெய்தனர்

யாழ்ப்பாணம்,ஓக.3

பல வருடங்களாகக் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டு வந்த குடும்பப் பெண் ஒருவரை யாழ். பொலீஸ் நிலைய சிறு குற்றத் தடுப்புப்பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டப் பகுதியில் பிள்ளைகளின் உதவியுடன் கசிப்பு உற்பத்திசெய்து விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறில் சகாயராணி என்பவரையே பொலீஸார் கைதுசெய்தனர்.

இவரின் வீட்டினைப் பொலீஸார் சோதனை செய்தபோது மூன்று கான்களில் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

பொதுமக்கள் சிலர் பொலீஸாருக்குத் தெரிவித்த தகவலை அடுத்தே அங்குசென்ற பொலீஸார் மேற்படி பெண்ணைக் கைதுசெய்தனர். (10-6)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வலி.தெற்கு,ஓக.3

அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர் பதிலாள்களைப் பதிவுசெய்யும் திட்டத்தின் கீழ் சுன்னாகம் தபாலகத்துக்கு பின்வரும் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 23 ஆம் திகதியன்று 18 வயது நிரம்பியவர்களாகவும் எட்டாம் ஆண்டு சித்தியடைந்தவர்களாகவும் குறைந்தது இரண்டு வருடங்கள் கடித விநியோகத்தில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

இவர்கள் தமது விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலருக்கு இம்மாதம் 23 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-152)

**இரவுக் காவலாளர் தேவை**

பேக்கரி ஒன்றிற்கு இரவு நேரக் காவலாளி உடன் தேவை. விரும்புபவர்கள் நேரில் வரவும்.
(அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

118, றொலெக்ஸ் பேக்கரி,
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம். (34834)

## கந்தன் காலடியில் சேர்ந்து ஓராண்டு நிறைவில்

மலர்வு 26 - 12 - 1925

உதிர்வு 15 - 08 - 2003



**திருமதி கனகம்மா சரவணமுத்து**

திதி:03-08-2004

சந்தனமாய் உமை உரைத்து
எமக்கு மணம் தந்தீர்
எம் விழிகள் மூடும் வரை
நிதம் நினைவில் நிற்பீர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

748, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(34836) (26-34-18-11)

## மூன்றாம் மாத நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 - 08 - 1970

ஆண்டவன் அணைப்பில் 03 - 05 - 2004



**அமரர் தில்லைநாதன் கெங்காதரன்**
[உரிமையாளர்: தரன் மரக்காலை, பூநாறி மரத்தடி, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்]

விதியின் வினையால் எம் கூடாரத்தின் கயிறு அறுந்தது
எம் இதயத்து ஒளிவிளக்கை பாதியிலே பாவி அவன் பறித்துச் சென்று
தொண்ணூறு நாள்கள் ஓடிவிட்டன, தொண்ணூறாயிரம் ஆண்டானாலும்
திரும்பப் பெறமுடியாத எம்மணிக் கொழுந்தின் நினைவினால் இங்கு
நாம் நித்தம் நித்தம் உடலைப் பிளிந்தும் உயிரைப் பிளிந்தும்
துன்பத்தீயினுல் விழுந்து சுடுபடுகிறோம்.

மில் லேன்,
மல்லாகம். (34828) — குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**சின்னையா சிதம்பரப்பிள்ளை**
(சிதம்பரப்பிள்ளை ஸ்ரோர்ஸ்)

ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிதம்பரப்பிள்ளை நேற்று (02.08.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற லட்சுமியின் அன்புக் கணவரும் வசந்தா, சந்திரன் (ஆசிரியர், வவுனியா), சாராதா, சாந்தா, சுகந்தா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராஜரட்ணம் (வனிக்கா மெடிக்கல்ஸ்), தனேஸ்வரி, விவேகானந்தன், மகேந்திரன், தர்மராஜா (சரண்யா மோட்டோர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருஜன், கஜன், சுஜானி, ஜட்சினி, யாழினி, லோஜினி, புவித்திரா, சுவர்ணன், சுஜவன், நிவேதனா, சரண்யன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-08-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஏழாலை மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உசத்தியோடை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.
*(ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு முன்)*

மக்கள், மருமக்கள்.

(34837) (26-34-11-18)

யாழ்ப்பாணத்தில் **SAAMSTECH** இன்

## ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு

இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறது.

நீங்கள் விரும்பிய நாள்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணிநேரம்.

(சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு)
முழுமையாகக் கதைக்கலாம்
பாடநெறியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ்

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் 6000/-, சிங்களம் 4000/-

**SAAMSTECH**
**Psalm Institute of Engineering and Technology**
**22-1/4, Galle Road, Dehiwala,**
**5540200, 0714104100**

குறிப்பு:
தேசிய ஆங்கில டிப்ளோமாவிற்கான அடுத்த தொகுதி பாடப் புத்தகங்கள் 6,7,8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.
(சி-36699) (26-34-11-18)

# பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணபுரிய விரும்புவோர் தன வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.08.05 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை:**
(1) வரி அறவீட்டாளர்.

**தகைமைகள்:**
01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02) அகவை 18-35 வரை இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்:**
நாள்: 2004.08.05
நேரம்: காலை 10.00 மணி
இடம்: 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்

★ குறிப்பு:
1) கல்விச் சான்று 3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2) தே. அ. அட்டை 4) மேலதிக தகைமைச் சான்றுகள்

(34835)(34-11-18)

## ஆளுகை, சந்தைப்பகுதி, யாழ். மாவட்டம்

# கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை அணி


கிண்ணத்துடன் இலங்கை அணித்தலைவர்

8 ஆவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியிலும் இறுதியாட்டத்தில் தோல்வியடையும் சாபக்கேட்டுக்கு மீண்டும் ஒருதடவை பலியானதன் மூலம் கிண்ணத்தைப் பரிதாபகரமாகத் தவறவிட்டது இந்திய அணி.

கொழும்பு ஹெத்தாராம மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் இந்திய அணிக்கு ஆரம்பத்தில் மிக


பிரதமரிடமிருந்து கிண்ணத்தைப் பெறும் அத்தப்பத்து

மகிழ்ச்சியையும் இறுதியில் மிகவும் அவமானத்தையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது நிச்சயம்.

புக்கு ஏற்றவாறு நிதானமாக அடிக்கவேண்டிய பந்துகளை அடித்தும் தவிர்க்க வேண்டிய பந்துகளைத் தவிர்த்தும் அருமையானதொரு ஆட்டத்தை வெளிப்படுத்தினார் அத்தப்பத்து. அவருக்குத் துணையாக சங்ககாரவும் நன்றாக ஆடினார். இதனால், 25 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆயினும் வழமையான ஓட்டச் சராசரியுடன் ஒப்பிடும்போது இது குறைவுதான்.

53 ஓட்டங்கள் எடுத்திருந்த சங்ககார ஆட்டமிழந்ததை அடுத்துக் களமிறங்கிய அணியின் உபதலைவர் மஹேல ஜயவர்த்தன ஓட்டமெதுவும் எடுக்காமலே ஆட்டமிழந்தார். இதனால் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுகளை இழந்த இலங்கை அணிக்கு நெருக்கடி ஆரம்பித்தது. தொடர்ந்து வந்த டில்ஷான், அத்தபத்துவுடன் இணைந்து விரைவாக ஓட்டங்களை எடுத்தபோதும் 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அத்தப்பத்து ஆட்டமிழந்தார். பின்னர் ஆடவந்த இலங்கை அணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளை இழந்து 228 ஓட்டங்களையே எடுத்தது.

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் இத்தொடரிலேயே இந்த ஆட்டத்தில்தான் இர்பதான் பதானின் பந்துவீச்சுக்கு ஆரம்பம் முதலே ஓட்டங்கள் குவியத் தொடங்கின. முதலாவது ஓவரிலேயே 5 ஓட்டங்களைக் கொடுத்தார் அவர். அதேபோன்று ஹர்பஜனின் பந்துவீச்சையும் பதம் பார்த்தனர் இலங்கை அணியினர்.

இதனால், இர்பான் பதான் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் டெண்டுல்கர் 40 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் மிகச் சாதாரண இலக்கு 229 ஓட்டங்கள். இங்கிலாந்து மண்ணில் 325 ஓட்டங்களைக் கடந்து வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியவர்களுக்கு இது இலகுவானது மட்டுமல்ல ஓரிரு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து கடந்து விடக்கூடிய இலக்குமாகும் என்றே இந்திய அணியினர் மட்டுமன்றி 103 கோடி இந்திய ரசிகர்களும் ஏனைய ரசிகர்களும் எதிர்பார்த்தார்கள். ஆனால், நடந்தது என்ன?

களமிறங்கியவுடன் தான் எதிர்கொண்ட முதலாவது பந்தையே பவுண்டரிக்கு அனுப்பியதன் மூலம் இலங்கை அணிக்கு கிலியை ஏற்படுத்திய ஷேவாக் விரைவாக ஓட்டங்களைப் பெற முற்பட்டவேளையில் சமிந்தவாஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது இந்திய அணி 16 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பின்னர் களமிறங்கிய அணித்தலைவர் கங்குலி 4 ஓட்டங்களுடன் சொய்ஸாவின் பந்துவீச்சில் மஹேலவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனால், இந்திய அணிக்கும் இலங்கை அணிக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட நிலையே ஏற்பட்டது.

தொடர்ந்து வந்த லக்ஸ்மன் ஒருவாறு தாக்குப்பிடிக்க முனைந்தபோதும் இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ட்ராவிட், யுவராஜசிங், கைப் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் நம்பிக்கை நட்சத்திரம் டெண்டுல்கர் மட்டும் தனது விக்கெட்டைத் தக்க வைத்தவாறு நிதானமாக ஆடிக்கொண்டிருந்தார். 40 ஓவர்கள் நிறைவடைந்த நிலையில் இனியும் பொறுத்திருக்க முடியாது என்று பொங்கியெழுந்த அவர் டில்ஷானின் பந்துவீச்சில் மிகவும் அருமையான ஒரு பவுண்டரியை விளாசினார். இதைப் பார்த்த ரசிகர்கள் வெற்றிக்கனியைப் பறிக்கப்போகிறது இந்திய அணி என்று எண்ணிய வேளையில் விட்டாரா டில்ஷான். அவரின் அடுத்த பந்து விக்கெட்டைப் பதம் பார்த்தது. இதனால் 74 ஓட்டங்களுடன் களத்தை விட்டு வெளியேறினார் டெண்டுல்கர்.

இதனையடுத்து இந்திய அணியின் வெற்றிக்கிண்ணக் கனவு தகர்ந்தது. பின்னர் வந்த வீரர்கள் பவுண்டரிகள், சிக்ஸர்கள் என்று ஓட்டங்களை எடுத்தபோதும் 50 ஓவர்கள் நிறைவில் 9விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை மட்டுமே இந்திய அணியால் பெறமுடிந்தது. 25 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதன்மூலம் மூன்றாவது தடவையாக இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளமை


டெண்டுல்கரின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்வில் டில்ஷான்

குறிப்பிடத்தக்கது.

ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தப்பத்துவும் ஆட்டத் தொடர் நாயகனாக அணியின் முன்னாள் தலைவர் ஜயசூரியவும் தெரிவாகினர். தொடர் நாயகனான ஜயசூரியவுக்கு கார் பரிசாக வழங்கப்பட்டது. வெற்றிக் கிண்ணத்தை இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து மாவன் அத்தப்பத்துப் பெற்றுக்கொண்டார். 8ஆவது ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணி, பாகிஸ்தான் அணி மற்றும் ஆஸ்திரேலிய அணி ஆகியன கலந்துகொள்ளும் முத்தரப்புத் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி ஹொலண்டில் ஆரம்பமாகவுள்ளது.இதற்கான இந்திய அணி வீரர்கள் விவரம் நாளை மறுதினம் வியாழக்கிழமை அறிவிக்கப்படவுள்ளது. இந்த அணியிலாவது ஹேமங்பதானி, சஞ்சய் பங்கார், அஜித் அகார்கர், ரொகான் கவாஸ்கர் ஆகியோருக்கு இடம் கிடைக்குமா? அல்லது கங்குலிக்குப்பிடித்த இந்த அணிதான் மீண்டும் அறிவிக்கப்படுமா? ★


வெற்றிக் களிப்பில் இலங்கை அணியினர்

## ஜெயஸ்ரீ

கிண்ணத்தை வெல்வதற்காகவே வந்தோம். கிண்ணத்தை வெல்வது உறுதி. ஜயசூரியவை வீழ்த்துவதற்குப் புதிய வியூகம் வகுத்துள்ளோம் என்பன போன்ற கதைகளைக் கங்குலியில் இருந்து ஹர்பஜன்சிங் வரை ஒவ்வொருவரும் கூறியிருந்தனர். ஆனால், கிண்ணம் மட்டுமல்ல கார் கூட இந்திய அணிக்குக் கிடைக்கவில்லை. நாணயச் சுழற்சியில் தோல்வியடைந்து முதலில் களத்தடுப்புச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபோதும் கூட, இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜயசூரியவையும் அபிஷ்க குணவர்த்தனவையும் 31 ஓட்டங்களுக்குள் வீழ்த்தியபோது இந்திய அணியினர் காட்டிய மகிழ்வுக்கு அளவில்லை. ஆட்டத்தைப் பார்த்து ரசித்த ரசிகர்களும் கூட ஒரு கணம் மகிழ்ந்துதான் போயினர்.

ஆனால், அணித்தலைவர் என்ற பொறுப்

# 9ஆவது ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் பாகிஸ்தானில்

கொழும்பு,ஓக.3

அடுத்த ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2006 இல் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இத் தொடர் முதன் முதலில் சார்ஜாவில் 1984 இல் நடந்தது. 2004 இல் பாகிஸ்தானில் போட்டி நடப்பதாக இருந்தது. ஆனால், இந்தியாவுடனான உறவைக் கருத்தில் கொண்டு இலங்கைக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் கொழும்பில் ஆசியக் கிரிக்கெட் கவுன்ஸிலின் செயற்குழுக் கூட்டம் கடந்த வாரம் நடந்தது. இதில் 2006 இல் போட்டியை நடததும் உரிமையை பாகிஸ்தானுக்கு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. இது பற்றிக் கவுன்ஸில் தலைமை நிர்வாகி அஷ்ரபுல்




ஹக் கூறுகையில்:-

இந்திய - பாகிஸ்தான் இடையிலான கிரிக்கெட் உறவுகள் சீரடைந்து விட்டன.இதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு முதல் முறையாக வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிக்கான அட்டவணை பின்னர் வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

2004 ஆசியக் கிண்ணத் தொடரின் மூலம் 85 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்காளதேஷ் அணிகள் ஒவ்வொன்றுக்கும் 12 கோடி ரூபா வழங்கப்படும். ஹொங்கொங், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகளுக்கு தலா 2 கோடி ரூபா வழங்கப்படும். மீதமுள்ள தொகை இப்பகுதியில் கிரிக்கெட் வளர்ச்சிக்காகப் பயனபடுத்தப்படும் என்று செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. (10)

## ஈரான் அரையிறுதிக்கு முன்னேறியது

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ண உதைபந்தாட்டத்தில் ஜப்பான், ஈரான் அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

பெய்ஜிங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விறுவிறுப்பான கால் இறுதி ஆட்டத்தல் 3 முறை சம்பியனான ஈரானுடன் உலகக் கிண்ணபோட்டியில் அரையிறுதியில் விளையாடிய, தென்கொரியா விளையாடியது.

ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன. இதையடுத்து நடந்த பெனால்டி வாய்ப்பில் ஈரான் 4:3 என்ற கோல் கணக்கில் தென் கொரியாவின் அரையிறுதிக் கனவைத் தகர்த்தது. இந்த வெற்றியை அடுத்து, போட்டியை நடத்தும் சீனாவுடன் அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ளது ஈரான்.

மற்றொரு ஆட்டத்தில் நடப்புச் சம் பியன் ஜப்பான் 4:3 என்ற கோல் கணக்கில் ஜோர்தானை வெளியேற்றியது. (10)


தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீநிவாசன், விளையாட்டு அலுவலர் செ.சதீஸ்குமார், வைத்தியகலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படம்-வலி.வடக்குச் செய்தியாளர்)*

## வெள்ளிப் பதக்கம் பெற்றனர்

யாழ்ப்பாணம்,ஓக.3

மதங்களுக்கிடையிலான சர்வதேச அமைப்பினால் நடத்தப்பட்ட 22 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டி தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த ம.சஞ்ஜீவ், எஸ்.கமலமோகன் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த ம.சஞ்ஜீவ் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 2ஆம்இடத்தையும், எஸ்.கமலமோகன் உயரம் பாய்தல் போட்டியில் 2ஆம் இடத்தையும் பெற்றதன் மூலம் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர். (10-190)

## மேஜர் கணேஸ் ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டி

திருகோணமலை,ஓக.3

மேஜர் கணேஸ் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் திருகோணமலை, சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பன இடம்பெறவுள்ளன. (10-290)

## இறுதிப்போட்டியில் விளையாட இந்திய ஜோடி தகுதி

ரொரண்டோ,ஓக.3

மாஸ்டர் டென்னிஸ் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி தகுதி பெற்றுள்ளது. கனடாவில் உள்ள ரொரன்ரோவில் டென்னிஸ்போட்டிகள் நடக் கின்றன. இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி சுமார் இரண்டாண்டுகளுக்குப் பிறகு இணைந்து களமிறங்கியுள்ளனர். ஒலிம்பிக் போட்டிக்கு முன்னோட்டமாக, இவர்கள் இருவரும் ஜோடி சேர்ந்து விளையாடுகின்றனர்.

அரையிறுதிப் போட்டியில் பயஸ் - பூபதி ஜோடி வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. (10)

# குரு பெயர்ச்சியால் எத்தகைய பலன் கிட்டும்?

குருபகவான் தற்போது சிம்மராசியில் இருந்து கன்னி ராசிக்குச் செல்கிறார். குரு பெயர்ச்சி வாக்கியப் பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு (2004) ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்று நடக்கிறது. (திருக்கணித பஞ்சாங்கப்படி ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி குரு பெயர்ச்சி நிகழ்கிறது) இவர் 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை கன்னிராசியில் இருப்பார்.

குரு பெயர்ச்சியினால் 12 இராசிகளின் பலன் மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் இங்கு தொடர்ந்து பிரசுரமாகின்றன. நேற்றைய பத்திரிகையில் மேடம், இடபம் ஆகிய ராசிகளின் பலன்கள் பற்றிப் பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மிதுனம்

மிதுன ராசி அன்பர்கள் சீரிய சிந்தனையும் சிறந்த பேச்சாற்றலும் கொண்டவர்களாக இருப்பர். யார் தயவும் இன்றிச் சொந்தக் காலில் நின்று முன்னேற நினைப்பீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகம் கொண்டவர்கள். உங்களுக்கு குருபகவான் இதுவரை 3ஆம் இடத்தில் இருந்தார்.

அது அவ்வளவு சிறப்பான நிலை அல்ல. உங்கள் முயற்சியில் அவ்வப்போது தடைகள் ஏற்பட்டு இருக்கும். சிலர் வேலையை இழக்கும் நிலைகூட ஏற்பட்டு இருக்கலாம். அதோடு தற்போது ஏழரைக் காலம் வேறு, சனி பகவான் உங்கள் ராசியில் இருந்து பல்வேறு இன்னலைத் தந்து கொண்டிருக்கிறார்.

உறவினர்கள் வகையில் மனக்கசப்பு. கேது உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் இருந்து உடல் உபாதைகளைத் தந்திருக்கலாம். ஆனால் ராகு மட்டும் 11ஆம் இடத்தில் இருந்து பொருளாதார வளத்தைக் கொடுத்து உங்களைக் காத்திருப்பார். அவரால் சிலர் முன்னேற்றம் கண்டிருக்கவும் வாய்ப்பு உண்டு.

தற்போது குரு பகவான் 3ஆம் இடத்தில் இருந்து 4ஆம் இடத்துக்குச் செல்கிறார். இதுவும் சிறப்பான நிலை என்று சொல்ல முடியாது. ஆனால் கடந்த காலப் பலன்களில் இருந்து இது மாறுபடும். பொதுவாக குரு பகவான் 4இல் இருக்கும்போது மன உளைச்சலையும், உறவினர் வகையில் வீண் பகையையும் உருவாக்குவார் என்பது ஜோதிட வாக்கு.

ஆனால் அதைக் கண்டு கவலை கொள்ள வேண்டாம். கோச்சார அடிப்படையில் பலனைப் பார்க்கும்போது மற்றைய கிரகங்களின் நிலையையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ராகு கேது பெயர்ச்சி நடக்கிறது.

தற்போது நன்மை தந்து கொண்டிருக்கும் ராகு 10ஆம் இடத்திற்குச் சென்று நற்பலனைக் கொடுக்க முடியாதவராகிறார். அதேபோல் கேது 4ஆம் இடத்திற்கு வருவதும் சிறப்பு அல்ல.

2005ஆம் ஆண்டு பெப்ரவரிக்குப் பிறகு எந்த முக்கிய கிரகமுமே சாதகமாக இல்லையே என்ற தன்னம்பிக்கையை இழக்க வேண்டாம். நம்பிக்கையோடு இருங்கள். உங்களுக்கு உதவி செய்ய முன்வருவார் சனி பகவான். என்ன ஏழரைச் சனி காலத்தில் அவரால் நன்மை செய்ய முடியுமா? என்று எண்ணுவது எமக்குப் புரிகிறது.

சனியின் இருப்பிடம் சரியில்லை. என்றாலும் அவரது 3ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக உள்ளது. அதன்மூலம் அவர் பொருளாதாரத்தை வளப்படுத்துவார். தொழிலில் சிறப்பைத் தருவார். காரிய அனுகூலத்தைக் கொடுப்பார்.

உங்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். குடும்பத்திலும் அவர் மகிழ்ச்சியைத் தருவார். மேலும் வேதையின் அடிப்படையில் பெப்ரவரி 2005 வரை குருவால் கெடுபலன் செய்யமுடியாது. மேற்கண்ட அடிப்படையில் பொதுவான பலனை இனிக் காணலாம்.

உங்கள் முயற்சியில் தடைகள் வந்தாலும் உங்களின் சீரிய முயற்சியால் எடுத்தக்காரியம் அனைத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பொருளாதார வளத்தில் மேம்பாடு காணலாம். 2005 பெப்ரவரிக்குப் பிறகு பணப்புழக்கம் சற்றுக் குறையலாம்.

வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. அதே நேரம் வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கப் பெறலாம். மதிப்பு, மரியாதை சீராக இருக்கும். செல்வாக்கு எந்த வகையிலும் பாதிக்காது. வழக்கு விவகாரங்கள் சுமாராக இருக்கும். புதிய வழக்கு எதிலும் சிக்க வேண்டாம்.

குடும்பம்— மகிழ்ச்சிக்குக் குறை இருக்காது. கணவன்—மனைவி இடையே அன்பு நீடிக்கும். புத்தாடை, அணிகலன்கள் வாங்கப் பெறுவீர்கள். உறவினர் வகையில் எதிர்பார்த்த அனுகூலமான போக்கு இருக்காது. 2005 பெப்ரவரி மாதத்திற்குப் பிறகு அவர்கள் வகையில் பிரச்சினை வரலாம்.

அவர்களிடம் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. சிலருக்குத் தூரத்து உறவினர் வகையில் இருந்து விரும்பத்தகாத செய்திகள் வரலாம். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தடைப்படலாம்.

குடும்பத்தில் இருக்கும் பெரியோர்களின் ஆசியும், ஆதரவும் உங்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். சிலர் விருந்து, விழா எனச் சென்று வருவீர்கள். சிலர் சிரத்தை எடுத்துப் புதிய வீடு வாங்கலாம். அதன்மூலம் கடன் வாங்க நேரிடலாம்.

உத்தியோகம்— சீரான நிலையில் இருப்பர். வேலைப்பளு அதிகரிக்கலாம். ஆனாலும், அதற்குரிய பலன் கிடைக்காமற் போகாது. உங்கள் வேலையைப் பிறரிடம் கொடுக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும்.

சற்று முயற்சி எடுத்தால் உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். வேலைப் பளுவைக் கருத்திற் கொண்டோ அல்லது ஏதோ காரணத்தினாலோ வேலையை விட்டு விடும் சூழ்நிலைக்குப் போக வேண்டாம். அதிக உழைப்புக்கு அஞ்ச வேண்டாம்.

வியாபாரம் — சிறப்பான பலனைக் காணலாம். ஆனால் அதிக அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி செய்வார்கள். அரசு வகையில் எந்த உதவியும் கிடைப்பது அரிதாகும். புதிய தொழில் சீராக இருக்கும். ஆனால் அதற்காக அதிக முதலீடு செய்ய வேண்டாம்.

2005 பெப்ரவரிக்குப் பிறகு சிலர் பண விஷயத்தில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. யாரை நம்பியும் பணத்தை ஒப்படைக்க வேண்டாம். உங்கள் முன்னேற்றத்திற்கு ஏதோ ஒரு வகையில் பெண் உதவிகரமாக இருப்பார். வெளியூர்ப் பயணம் மேற்கொள்வர்.

## கடகம்

கடக ராசி அன்பர்கள் எப்போதும் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். நீங்கள் யாரையும் எளிதில் நம்பிவிடுவீர்கள். கையில் இருக்கும் பணத்தை நொடிப்பொழுதில் செலவு செய்யும் தன்மை கொண்டவர்கள். பொதுவாக எந்தப் பணத்தையும் சேமிப்பில் சேருங்கள்.

கடந்த ஓர் ஆண்டாகக் குரு பகவான் உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைத் தந்து கொண்டு இருந்தார். உங்களை எதிர்த்தவர்கள் உங்களைச் சரண் அடையும் நிலை ஏற்பட்டு இருக்கும்.

பகைவர்களின் சதி தவிடுபொடி ஆகிவிடும்.

மனதில் துணிச்சல் பிறந்து உங்கள் ஆற்றல் மேம்பட்டு இருக்கும். பொருளாதார வளம் சிறப்பாக இருந்து இருக்கும். வியாபாரம், வணிகம், நல்ல லாபத்தைக் கொடுத்து இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மன நிம்மதியோடு பணியாற்றி இருப்பீர்கள்.

சிலர் புதிய பதவி பெற்று இருப்பர். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடி இருக்கும். வீடு, மனை வாங்கி இருக்கலாம். உங்களுக்குத் தற்போது ஏழரைச் சனியின் தொடக்க காலம். ராகு 10ஆம் இடத்தில் இருக்கிறார். இதனால் செய்தொழிலில் பங்கம் வரலாம்.

4ஆம் இடத்தில் இருக்கும் கேது உங்களைத் தீயோர் சேர்க்கைக்கு ஆளாக்கலாம். இந்த இடர்பாடுகள் எதுவும் அதிகமாக உங்களைப் பெரிய அளவு பாதிக்காத வகையில் குரு பகவான் பலன் அமைந்திருக்கும்.

இவ்வளவு நன்மைகளைத் தந்து கொண்டிருந்த குரு பகவான் 2ஆம் இடத்தில் இருந்து 3ஆம் இடமான கன்னி ராசிக்கு வந்துள்ளார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படை மாண்டது என்பது ஜோதிட வாக்கு.

அதாவது துரியோதனனின் ஜாதகத்தில் 3இல் குரு இருக்கும்போது அவனது படைதோல்வி அடைந்தது என்பதாகும். அந்த அளவுக்கு மோசமான பலன்கள் உங்களுக்கு நடக்குமோ என்று அஞ்ச வேண்டாம். ஏனெனில் அந்தச் சூழ்நிலை வேறு, இன்றைய உங்களின் நிலை வேறு.

பொதுவாகக் குரு 3ஆம் இடத்தில் இருக்கும்போது முயற்சியில் தடை ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காது. உங்கள் நிலையில் மாற்றம் ஏற்படும். அப்படியானால் குருவால் பிற்போக்கான பலன்கள்தான் நடக்குமோ என்று அஞ்ச வேண்டாம்.

காரணம் குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் குருவின் அனைத்துப் பார்வைகளும் சாதகமாக உள்ளன. குருவின் பார்வைக்கும் கோடி நன்மை உண்டு. எந்த இடையூறையும் அவரது பார்வை உடைத்து எறியும். அதோடு நாம் மற்றக் கிரகங்களின் நிலையையும் கொண்டு பலனைக் கணக்கிட வேண்டும்.

சனி பகவான் தற்போது உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் இருக்கிறார். இது சாதகமான இடம் அல்ல என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறோம். அவர் பொருளாதாரத்தை விரயமாக்கலாம். அதே நேரம் சனிக்கு வேதையாக குரு இருக்கிறார்.

எனவே, சனியால் கெடு பலன்கள் கொடுக்க முடியாது. 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ராகு—கேது பெயர்ச்சி நடக்கிறது. அப்போது ராகு 9ஆம் இடத்திற்கு மாறுகிறார். அதன் பின் அவர் உங்கள் முயற்சியில் தடைகளை உருவாக்கலாம்.

அதே நேரம் கேது 4ஆம் இடத்தில் இருந்து 3ஆம் இடத்திற்கு வருகிறார். இது சிறப்பான நிலை. அதன்பின் தெய்வ அனுகூலம் கிடைத்து வாழ்க்கையில் மேம்பாடு அடையச் செய்வார். எனவே, குரு சாதகமற்ற இடத்திற்குச் சென்றாலும் அவரது பார்வையாலும் பெப்ரவரிக்குப் பிறகு கேதுவும் நன்மைதர இருப்பதாலும் சிறப்பான பலனையே காணலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து இனி விரிவான—பொதுவான பலனைக் காணலாம்.

உங்கள் முயற்சியில் சிறுசிறு தடைகளைச் சந்திக்கலாம். ஆனாலும் உங்களின் தீவிர முயற்சியால் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்கலாம். பொருளாதார வளம் மேம்படும்.

சோதிட வித்தகர்
காழியூர் நாராயணன்

தேவைகள் பூர்த்தியாகும். சிலர் ஆடம்பரப் பொருள்களை வாங்குவர். 2005 பெப்ரவரிக்குப் பிறகு நல்ல பணப்புழக்கம் இருக்கும். புதிய வாகனங்கள் வாங்க வாய்ப்பு உண்டு. மதிப்பு மரியாதை சிறப்பாக இருக்கும். செல்வாக்கு உயரும். சக நண்பர்கள் உதவிக்கரமாக இருப்பர்.

குடும்பம்— மகிழ்ச்சி நீடிக்கும். கணவன்—மனைவி இடையே அன்பு பெருகும், சிறு சிறு மனக்குழப்பங்கள் இருந்தாலும் அவை நொடிப்பொழுதில் மறையும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான சகல வசதிகளையும் பெறுவீர்.

சுபநிகழ்ச்சிகள் குருவின் பார்வையால் நடக்கும். சிலர் சற்று முயற்சி எடுத்துப் புதிய வீடு கட்டுவர். அல்லது தற்போது இருப்பதை விட வசதியான வீட்டிற்குக் குடிபுகுவர். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். சிக்கனமாக இருக்க வேண்டும். வீண் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

உத்தியோகம் — கடந்த காலத்தைவிட அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும். ஆனால் உழைப்புக்கேற்ற வருமானம் இருக்கும். உங்கள் ஆற்றல் மேம்படும். உழைப்பு அதிகரிக்கும். உழைப்புக்கேற்ற வருமானமும் இருக்கும். சிலர் முயற்சி எடுத்துப் புதிய பதவிகளைப் பெறுவர்.

மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பர். முயற்சி எடுத்தால்தான் கோரிக்கைகள் நிறைவேறும். உங்கள் பொறுப்புகளை யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம்.

வியாபாரம் — ஆரம்பத்தில் எதிர்பார்த்த வருவாயைக் காண முடியாது. படிப்படியாக நல்ல பலனைக் காண்பர். வெகுவிரைவில் விடிவு காலம் வரும். தற்போது தொழிலில் இலாபத்துக்குக் குறை இருக்காது. பெப்ரவரிக்குப் பிறகு வருமானம் அதிகரிக்கும்.

சிலர் வணிகம் விஷயமாக வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். கூட்டுத் தொழிலில் நல்ல வளத்தைக் காணலாம். வாடிக்கையாளர் மத்தியில் நன்மதிப்பைப் பெறுவர். தீயோர் சேர்க்கையால் அவதிப்பட்டு வந்தவர்கள் அதிலிருந்து 2005ஆம் ஆண்டு விடுபடுவர்.

(வளரும்)

வடக்கு - கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையம்
(CANE-U.K.- Cancer Aids for North & East)
நடத்தும்
பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம்

நாள் : 05.08.2004 வியாழன் காலை 9.30 முதல் மாலை 3.00 மணி வரை
இடம்: 69, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(கந்தர்மடம் சந்தியிலிருந்து அரசடி வீதியில் பிரியும் வீதி)

அன்றைய தினம் CANE - U.K. அமைப்பைச் சேர்ந்த பெண் மருத்துவர் குழு பெண்களை இலவசமாகப் பரிசோதிக்கும். மார்பகக் கட்டிகள், அடிப்பகுதியில் முறையற்ற இரத்தப்போக்கு என்பவற்றுக்கான சோதனைகள், இதனால் எழும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தல், வேறு உடற்கோளாறுகளினால் எழும் சந்தேகங்களுக்குப் பதிலளித்தலும், ஆலோசனை வழங்கலும்.

இம்மருத்துவ முகாமில் பெண்கள் வயது வரம்பின்றிக் கலந்து கொண்டு, நோய்களுக்கான அறிகுறிகள் ஏதும் உள்ளதா என்று அறிந்து, இருக்குமாயின் அவற்றுக்கான ஆலோசனைகளைப் பெற்று, நல்வாழ்வு வாழ்வீர்களாக.

- இணைப்பாளர் CANE - U.K.

(34814)(34-11-16-26)

# இந்தியாவுக்குக் களங்கம் விளைவித்த வல்வைப் படுகொலைகள்...

"மிஸ்டர் மேனன்!... ஒரு நகரத்தை இவ்வளவு மோசமாகத் தாக்கி, வைத்திய சாலைக்குள் அத்துமீறி நுழைந்து நோயாளிகளைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருக கிறீர்... உம்முடைய செயல் எங்களுடைய நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது... இங்கு இருக்கின்ற பிரஜைகள் குழுவிடம் முதலில் நீர் மன்னிப்புக் கேட்க வேண்டும்...."

ஊறணி வைத்தியசாலையின் வைத்திய




அதிகாரி அலுவலகத்தில் நின்ற பிரிகேடியர் சமேராம், மிகவும் கடுப்பாக நின்றமை கப்டன் மேனனை நிலைகுலையச்செய்துவிட்டது.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி வல்வெட்டித்துறை, ஊறணி வைத்திய சாலையில் வெறியாட்டம் ஆடிய இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்குத் தலைமை தாங்கிய கப்டன் கோபாலகிருஷ்ணமேனன் அன்று தனது உயர் அதிகாரி பிரிகேடியர் சமேராம் முன்னால் தலைகுனிந்து கூனிக்குறுகி நின்ற போதே என்றோ ஒருநாள் இந்த வல்வெட்டித் துறைக் கிராமத்தை அழிக்கவேண்டும்" என்று சபதம் எடுத்திருக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாக 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் திங்கள் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித் துறைப்படுகொலைகள் இடம்பெற்று முடிந்தன.

1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் திங்கள் 2ஆம் நாள் ஊரிக்காடு இந்திய இராணுவ முகாமில் இருந்தும், பொலிகண்டி இராணுவ முகாமில் இருந்தும் வெளியேறிய இந்திய ஆக்கிரமிப்பு இராணுவக்கும்பலுக்குத் தலைமை வசித்தவர்களில் கப்டன் மேனன், கப்டன் கபூர் முக்கியமானவர்களாக• இருந்தனர்.

ஆம்! கப்டன் மேனன் பழிவாங்கும் ஒரு களமாக அன்று வல்வெட்டித்துறையைக் குறி வைத்துச்செயற்பட்டான். அவனுடன் ஊரிக்காடு இராணுவ முகாம் பொறுப்பாளராக இருந்த மேஜர் சுதர்சன் சிங் தலைமையில் V வடிவ வியூகம அமைத்து விடுதலைப் புலிப் போராளிகளைக்குறிவைத்து நகர்ந்தபோதே இராணுவத்தினருடனான மோசடி ஆரம்பமானது.

வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் தாக்கப்பட்டபோது உடுப்பிட்டி இராணுவ முகாம் கேணல் சர்மா அன்று வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினூடாக வடமராட்சிப் பொறுப்பாளர் மேஜர் ஜேம்சுடன் செய்து கொண்ட கனவான் ஒப்பந்தத்திற்கு அமைவாக அங்கே இந்தியச்சிப்பாய்கள் தாக்கப்படாமல் இருந்தார்கள் என்ற உண்மை வெளியுலகத்திற்கு அன்று தெரியாது.

அந்தக் கனவான் ஒப்பந்தத்தை மீறும் வகையில் விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கு

**வல்வை ந. அனந்தராஜ்**

டன் செயற்பட்ட சீக்கியப்படைகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவே அன்று அவர்கள் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அன்று ஒன்பது சீக்கியச்சிப்பாய்கள் கொல்லப்பட்டது இந்திய ஆக்கிரமிப்பாளருக்குப் பேரதிர்ச்சியாக இருந்திருக்கவேண்டும்.

அதன் விளைவு!...

வெறிகொண்ட இந்தியப்படைகள் ஓகஸ்ட் திங்கள் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை நகரத்தையும் அயல் ஊர்களையும் சுற்றிவளைத்து ஊரடங்குச்சட்டத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு ஆடிய வெறியாட்டத்தில் நேர்ந்த "வல்வெட்டித்துறைப் படுகொலைகள்" வரலாற்றில் இந்தியருக்குக் கறைபடிந்த செய்தியாக இன்றும் நிலைத்துவிட்டது.

அமெரிக்க இராணுவத்தினரின் வெறியாட்டத்திற்கு ஆளாகிய வியட்நாமின் மைலாய் படுகொலை போல் பிரித்தானிய இராணுவத்தினருக்கு இந்தியாவின் "ஜாலியன் வாலா பாக்" படுகொலை போன்று இந்தியாவுக்கு ஒரு வல்வைப் படுகொலை களங்கம் சேர்த்துவிட்ட வரலா

> வல்வைப் படுகொலைகள் நடைபெற்று 15 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அந்தக் கொடுமையின் பதிவுகள் இங்கே கட்டுரை வடிவில்

றாகிவிட்டது.

ஆம், அந்தப் படுகொலையின் விளைவாக

★ 63 அப்பாவிப் பொதுமக்கள், மாணவர்கள், பெண்கள், வயோதிபர் என்ற பேதமின்றி வெட்டப்பட்டும், சுடப்பட்டும், எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர்.

★ நூற்றுக்கதிகமானோர் காயப்படுத்தப் பட்டனர்.

★ ஆயிரக்கணக்கான வீடுகளும், கடைகளும் எரிக்கப்பட்டன. .

★ 15 திருமணமான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர்.

★ 50 இற்கும் அதிகமான இளம்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

★ பல இந்துக்கோயில்கள் சேதமாக்கப் பட்டன.

இவ்வளவும் செய்துமுடித்த இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிப் படுகொலைகள் நிகழ்த்துவதற்குக் காரணமாக இருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினால் அந்த ஓகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் எப்படி நிம்மதியாக உறங்கியிருக்கமுடியும்?

அந்த அழியா நினைவுகள் - மறக்கமுடியாத அவலங்களை விதைத்துச்சென்ற கொடூரமான இந்திய இராணுவத்தையும் இந்திய அரசையும் துயரின் விளிம்பில் உழன்றுகொண்டிருக்கும் வல்வை மக்களால் எப்படி மறக்க முடியும்?... எப்படி மன்னிக்கமுடியும்?

அந்தநிலையிலும், இந்தியாவைத் தாய் நாடு என்று ஒரு காலத்தில் நம்பி இந்திய விசுவாசிகளாக இருந்து இந்தியர்களால் முதுகில் குத்தப்பட்ட இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களில ஒருசில ஆயிரமாக இருந்து கண்ணீர் விடுவதைத் தவிர விடுதலை வேள்விக்கு ஆயிரக் கணக்கான உயிர்களை ஆகுதியாக்கிய வல்வெட்டித்துறை மக்களால் வேறு எதைத் தான் செய்யமுடியும்?

ஆனால், எமது நெஞ்சில் துயரங்களை விதைததுச்சென்ற அந்தத் துன்பியல் நாள்களை நினைவு கூரும் ஓகஸ்ட் 2ஆம், 3ஆம்,





4ஆம் திகதிகளையும் ஈழத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட படுகொலைகள் நிகழ்த்தப்படுவதற்குக் காரணமாகவும் பொறுப்பாகவும் இருந்த ராஜீவ் காந்தியையும் நிம்மதியான ஒரு நிரந்தரத் தீர்வுக்குத் தடையாக இருக்கும் இந்தியாவையும் எப்படி வல்வெட்டித்துறை மக களால் மறக்கமுடியும்.

இன்றும் அந்த நினைவுடன் வாழும் நாம் அனைவரும் அன்று இந்தியர்களால் கொல்லப்பட்ட எம்மவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

# டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க வடமராட்சியில் விசேட ஏற்பாடுகள்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் ஆராயப்பட்டது

வடமராட்சி,ஓக3

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் பரவாதிருக்க கிராமசேவையாளர் பிரிவு ரீதியாகத் தடுப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதென பருத்தித்துறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஒரு மாதத்திற்குள் வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் நோயாளிகள் இருவர் இனங்காணப்பட்டு அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுப் பூரண குணமடைந்துள்ளனர்.

எனினும், டெங்குக் காய்ச்சல் நோய்மேலும பரவாமல் மிக எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். அதற்கு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பருத்தித்துறைப் பிரதேச நகர சபைகள், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகம் ஆகியன ஒன்றிணைந்து செயற்பட்டுத் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் கேட்டுக்கொண்டார்.

டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்குக் குறிப்பிட்ட திணைக்களங்கள் போதிய ஒத்துழைப்பை வழங்குவதாகக் கூட்டத்தில் கலந்துகொண்ட அவற்றின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசசார்பற்ற நிறுவனமான போருட் நிறுவனத்தின் அனுசரனையுடன் டெங்குக் காய்ச்சல் தடுப்புத் தொடர்பாக பிரசுரம் ஒன்றைப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு விரைவில் வெளியிடவுள்ளது. (எ-173)

# சுன்னாகம் நகரில் தொடரும் போக்குவரத்து நெருக்கடிகள்

ஏழாலை,ஓக.3

சுன்னாகம் நகரில் பெரும் போக்குவரத்து நெருக்கடி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மத்திய சந்தையைச் சூழவுள்ள நான்கு வீதிகளிலும் காங்கேசன்துறை வீதியிலும் இந்நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப் பட்டது.

குறிப்பாக ஒருவழிப் போக்குவரத்துப் பாதை எதுவும் இல்லாத இந்த நகரில் சுன்னாகம் சந்தியில் இருந்து வரும் பழைய பொலீஸ் நிலையம் வரையிலும் -

அதேபோல் தெற்குப்புறமாகச் சுன்னாகம் பலநோ.கூ. சங்கம் வரையும் காங்கேசன்துறை வீதியின இரு மருங்கிலும் காலை முதல் மாலை வரை கனரக வாகனங்கள் தரித்துவிடப்படுகின்றன.

அதேவேளை, மேற்படி வீதிகளில் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள வியாபார நிலையங்களின் விற்பனைப் பொருள்கள் பலவும் வீதியை அண்டியே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதியூடாகப் பயணிக்கும் வாகனங்களும், பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்பட்டது.

(எ-45)

# வறுமையைப் பயன்படுத்தி மக்களை மதம் மாற்றுவது தடைசெய்யப்படவேண்டும்

## அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை

கொழும்பு,ஓக.3

வெளிநாட்டு உதவிகளைத் துஷ்பிரயோகம் செய்து யுத்தநிலை, வறுமைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்தி மதமாற்ற முயற்சிசெய்வது தடைசெய்யப்படவேண்டும். சகல மதத் தலைவர்களும் தமது மதத்தைச் சார்ந்த பிரசாரங்களை வழிப்படுத்தி மதசுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

மதமாற்றச் சட்ட மூலம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலே இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் ஜாதிகஹெல உறுமய உறுப்பினர் கொண்டுவரவுள்ள மதமாற்றச் சட்டத்துக்கு எதிராக நான் உயர் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மனு ஒன்றைத் தாக்கல்செய்துள்ளேன்.

தவறான முறைகளைப் பின்பற்றி மக்களை ஏமாற்றி மதம் மாற்றுவதை எமது மன்றம் எப்போதும் கண்டித்தும் எதிர்த்தும் வந்திருக்கின்றது. அரசமைப்பு சகல மதங்களையும் ஒரேசம அடிப்படையில் சுதந்திரமாகப் பின்பற்ற உத்தரவாதம் தந்துள்ளது. ஆனால், ஜாதிகஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் பௌத்த மதமே முதன்மையான மதம் என்ற அடிப்படையில் மதமாற்றத்தடைச்சட்ட மசோதாவைத் தாக்கல் செய்திருக்கின்றனர்

அந்த அடிப்படையை இந்நாட்டுக்கு இந்து மக்கள் என்றும் ஏற்றுககொள்ள மாட்டார்கள் என்று அதில் உள்ளது (எ-3)

# அம்பன் மத்திய மருந்தகத்தை மீள இயக்குமாறு கோரிக்கை

## பேராளர் மாநாட்டில் முன்வைப்பு

கொழும்புத்துறை,ஓக.3

இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த அம்பன் மத்திய மகப்பேற்று மருந்தகத்தைப் பாவனைக்கு அனுமதித்து நீண்டநாள்களாகியும் இயங்கமுடியாதநிலையில் உள்ளது எனக் கூறப்பட்டது.

மேற்படி மருந்தகத்தைப் பொறுப்பேற்ற சுகாதாரத் திணைக்களம் அதனை இயக்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் - அதனை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைக்கச் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - வடமராட்சிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

நெல்லியடியில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டிலும் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தற்போது குடத்தனையில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் மகப்பேற்று மருந்தகம் இயங்கி வருகின்றது. (எ-30)

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆஅவ" கடன் இல.2043 - SRI(SF)
## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் இல.02

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்ட (CAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JE/CAARP/ED/01 | யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 90'X25' அளவுடைய இரண்டு மாடி விஞ்ஞான ஆய்வுகூடம் மீளமைத்தல் | M6 | 52,000/= |
| 02 | JE/CAARP/ED/05 | இடைக்காடு மகாவித்தியாலயத்தில் 70'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலுடன் ஆசிரியர் விடுதி புனரமைத்தல் | M7 | 41,000/= |
| 03 | JE/CAARP/ED/07 | கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் 110'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் (தொகுதி 1) | M7 | 43,000/= |
| 04 | JE/CAARP/ED/07 | கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் 60'X25' அளவுடைய நூலகக் கட்டடம் பூரணப்படுத்தல் (தொகுதி 2) | M9 | 10,000/= |
| 05 | JE/CAARP/ED/08 | பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 90'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 35,000/= |
| 06 | JE/CAARP/ED/09 | தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் 110'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் (தொகுதி 1) | M7 | 43,000/= |
| 07 | JE/CAARP/ED/09 | தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் 100'X50' அளவுடைய பிரார்த்தனை மண்டபம் திருத்துதல் (தொகுதி 2) | M8 | 12,000/= |
| 08 | JE/CAARP/ED/10 | மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 110'X 25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 | 51,000/= |
| 09 | JE/CAARP/ED/12 | மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலையில் 110'X 25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 43,000/= |
| 10 | JE/CAARP/ED/13 | மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் 90'X 25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 35,000/= |
| 11 | JE/CAARP/RD/01 | வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் 6.86 கி.மீ. அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 47,000/= |
| 12 | JE/CAARP/RD/02 | வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் 5.48 கி.மீ. அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 45,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியூன நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   iii. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிபடுத்தப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   iv. "இக்ராட்"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   v. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைசெய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.
   vi. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 021-2223625 தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk).
6. ஒப்பந்த ஆவணங்கள் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா1000/=செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கபட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வியிடுவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி பி.ப.1.30 இற்கு முன்பாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி பிற்பகல் 3.00மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி-36683)(26-11-19)

## பாலர் பாடசாலைக்கு அடிக்கல் நடுகை

காரைநகர்,ஓக.3

காரைநகர், பிட்டிபெல்லை பாலர் பாடசாலை கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. காரைநகர் பிட்டியெல்லை ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.மணிகலாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் வேசிற சபேசன் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

காரைநகர் பிரதேச அரசியற்றுறைப் பொறுப்பாளர் கானகன் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர். (எ-73)

## ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஞாபகார்த்தமாகப் புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம்,ஓக.3

அரசியல் தலைவரும் சட்டமேதையுமான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்வி கற்கத் தகுதி பெற்று இம்மாதம் முதல் கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ள மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **Dr.C.Tissa Kappagoda, Professor of Medicine, One Shield's Avenue, TB 172, Bioletti Way, University of California, Davis, Davis California 95616, U.S.A.** என்னும் முகவரிக்கோ அல்லது **ctkappagoda@ucdavis.edu** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ எதிர்வரும் 30 ஆம திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-201)

## தொழில்சார் கணனிப் பயிற்சி

சாவகச்சேரி,ஓக.3

தென்மராட்சிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் கணனிப் பயிற்சியும், கருத்தரங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

கணனிப் பயிற்சியை றொரட்டுவப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தினர் வழங்கியிருந்தனர்.

சாவகச்சேரி அரிமாக் கழகம் இந்தத் தொழில்சார் பயிற்சியை ஒழுங்குசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-31)

## உள்நோக்கம் கொண்டவர்களின் ஆதரவு அரசுக்குத் தேவையில்லை ஜே.வி.பியின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.3

உள்நோக்கம் கொண்டவர்களின் ஆதரவு இந்த அரசுக்குத் தேவையில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளது ஜே.வி.பி.

ஐ.தே.கட்சி விடுத்த அறிக்கை ஒன்றுக்குப் பதில் அளிக்கும் வகையில் ஜே.வி.பியின் அரசியல்பீடம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி நிர்வாக யோசனை அடிப்படையில் அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாயின் அதற்கு ஆதரவு அளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்திருந்தது.

இதுகுறித்து ஜே.வி.பி. விடுத்திருந்த அறிக்கையில்,

சகல தேசப்பற்றுடையவர்கள் இந்தக் கூற்றை மிகவும் அவதானத்துடன் எடுத்துக்கொள்ளவேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளது.

புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனை தனிராஜ்ஜியம் ஒன்றை அமைப்பதற்கு வழிவகுக்கும் என்ற காரணத்தினால் ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதனை எதிர்ப்பதாக - அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (எ-7)

## காரைநகரில் மதகுசேதம்; பயணிகளுக்குச் சிரமம்

காரைநகர் கல்லூரி வீதியில் அமைந்துள்ள மதகு உடைந்த நிலையில் இருப்பதால் இந்த வீதி ஊடாக பொதுமக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அடிக்கடி இம்மதகினுள் வீழ்ந்து மக்கள் படுகாயமடையும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இந்த மதகினைப் புனரமைக்குமாறு கடந்த பல வருடங்களாக உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

விவசாய வீதியான இவ்வீதி ஊடாகவே வயல் நிலங்களுக்கு மாட்டுவண்டில்கள், உழவு இயந்திரங்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் மிக மோசமாக சேதமடைந்திருக்கும் இம்மதகுக் குழிக்குள் வீதியால் செல்லும் பாதசாரிகளும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களும் வீழ்ந்து படுகாயமடைவதும் பின்னர் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறுவதும் தொடர் கதையாகி விட்டதாக மேற்படி பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வீதியையும் மதகினையும் மற்றும் அயலிலுள்ள கால்வாய்களையும் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை ஆரம்பமாவதற்கு முன்னர் புனரமைக்க வேண்டியது அவசியம் என மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-73)

# முன்பள்ளிக் கல்விசார் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டியவை

**வடக்கு - கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கியதான முன்பள்ளிக் கல்வி சார்பான செயற்பாடுகளை, தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்ட கருத்துக்கள் இங்கு கட்டுரையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.**




### அறிமுகம்:

கல்விசார் முழுமையான அபிவிருத்தியில் முன்பள்ளிக் கல்வியும் முக்கியமான தளமாகவும், அடிப்படைக் கற்கையாகவும் அமைகின்றன. சமகாலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தை எல்லைப்பரப்பாகக் கொண்டு இயக்கம் பெற்றுவரும் முன்பள்ளிக்கல்வியின் செயற்பாடுகளில் எதிர் கொள்ளப்படும் இடர்பாடுகள், முன்பள்ளிப் பிள்ளைகளின் மனநிலையும் உளவியல் எதிர்பார்ப்பும், முன் பிள்ளைப்பருவ வகைப்பாடு, முன்பள்ளிக்கல்வியமைப்பின் நிர்வாக ஒழுங்கமைப்பு, அபிவிருத்திநோக்கிய அமுலாக்கத்திட்டங்கள், பன்னாட்டு நிறுவனத்தின் செல்வாக்கு என்ற தன்மைகளைக் கருவாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

### முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவமும் தோற்றமும்

பிள்ளையின் கற்றல், செயல், ஒழுங்கு, பரம்பரை அலகுடனும், ஒழுங்கமைந்த கற்றல், கற்பித்தல் நடைமுறையுடனும் இணைவு பெற்றது. பிள்ளை தன்னளவில் மாற்றத்தை பரவலாக்கப்பட்டு இருப்பதைக் காணமுடிகின்றது.

### முன்பள்ளிப் பிள்ளையும் மனநிலையும்

குழந்தைகள் 2½ - 3 வயதில் முன்பள்ளிக் கல்விச் செயற்பாட்டினுள் பிரவேசிக்கின்றார்கள். தன்னை ஒத்த பிள்ளையுடன் சேரும் வாய்ப்பும் ஓர் ஆசிரியரின் வழிகாட்டலும் அங்கு புதிய சூழலாகத் தோற்றம் பெறுகின்ற காலம்.

இதில் பிள்ளையின் கற்றல் வாய்ப்புக்குரிய சந்தர்ப்பங்களை முன்பள்ளிக்கல்வி அமைப்பினூடாக உருவாக்கிக் கொடுத்தல், விளையாடவும், தொடர்புகளை சுமுகமாகக் கட்டியெழுப்பவும் ஒரு திட்டமிடப்பட்ட செயற்பரிமாணம் ஊடாக வழிகாட்டப்படுதல்.

### முன்பள்ளி நிர்வாகக் கட்டமைப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் எட்டு நிர்வாக மாவட்டங்களிலும், 9 கல்வி நிர்வாக மாவட்டங்களாகவும், 24 கல்வி வலயங்களாகவும், 74 கோட்டக் கலவிப் பிரிவுகளாகவும் இயங்கி வருவதைக்காணலாம். இவற்றில் முன்பள்ளிக் கல்விநிலையங்கள்

★ இவ்ஆசிரியர்களுக்கு அரசு ஏனைய ஆசிரியர் பெறுகின்ற சம்பளத்தை ஒத்த வகையில் வழங்காமை இவர்களிடம் ஊக்கமின்மை மிகையாகக் காணப்படுகின்றது.

தற்போது ரூபா 1000 ற்கு மேல் ஆயிரத்து 794 ஆசிரியர்களும், ரூபா 500 - ரூபா 1000 இடையில் ஆயிரத்து 503 ஆசிரியர்களும், ரூபா 500 கீழ் 790 ஆசிரியர்களும், 664

## பன்னாட்டு நிறுவனங்களின் செல்வாக்கு உளவியல் எதிர்பார்ப்புக்கு வழிகாட்டுமா?

அட்டவணை - 01

| கல்வி நிர்வாக மாவட்டம் | முன்பள்ளி எண்ணிக்கை | முன்பள்ளி ஆசிரியர் எண்ணக்கை | 03-05 வயது பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 681 | 1125 | 18365 |
| கிளிநொச்சி | 152 | 231 | 5896 |
| முல்லைத்தீவு | 160 | 239 | 3721 |
| மன்னார் | 151 | 223 | 4574 |
| வவுனியா | 218 | 343 | 6294 |
| திருகோணமலை | 350 | 552 | 9675 |
| மட்டக்களப்பு | 464 | 915 | 17343 |
| கல்முனை | 380 | 707 | 10086 |
| அம்பாறை | 253 | 416 | 5131 |
| | 2809 | 4751 | 81088 |

(மூலம் - வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு - 2004)

ஏற்படுத்திக்கொள்ளச் சுயமாக இயக்கம் பெற்று முயன்று தவறல் முறைமை ஊடாகவும், அனுபவமூலமான முறைமையிலும் ஏற்படுத்திக் கொள்கின்றது. பிள்ளை ஆரம்ப காலங்களில் தன்னுடைய மூளையமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த மேற்கூறிய முறைமைகளைப் பயன்படுத்திப் பின்னர் ஒழுங்கமைந்த வகைப்பாட்டில் இயக்கம் பெறும் முன்பள்ளி, ஆரம்பப் பாடசாலை, பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், வேலை நிறுவனங்கள், தொடர்பாடல் கருவிகள் என்ற படிநிலையில் கற்றல் மையங்களை அல்லது கற்றல் தளங்களை விரிவுபடுத்திச் செல்வதை அவதானிக்கலாம்.

கற்றல் நிகழ்வில் முன்பள்ளி அமைப்பு முறைமை ஒழுங்கமைந்த பாடசாலை சார் கற்றல் தளத்திற்கு முன்னர் இடம்பெறுதல் பற்றித் தற்போது முக்கியத்துவப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் முன்பள்ளிக் கல்வியின் அவசியம் உணரப்பட்டுள்ளது. அத்துடன் புதிய கல்வியமைப்பில் முன் பிள்ளைப்பருவ கல்வியின் செயற்பரிமாணம் பற்றியும், பெற்றோருக்கான கல்வி பற்றியும் வலியுறுத்தப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டலாம்.

முன்பள்ளிக் கல்வியை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விரிவுபடுத்தும் வகையில் இலங்கையில் முதல் முதலாக 1997 இல் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு முன்பள்ளிக் கல்விசார் செயற்பாடுகள் பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இயக்கம்பெற்று வருவதுடன், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களிலும் தனியான ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு செயற்பாடுகள்

றன. பிள்ளையின் இயல்பூக்கங்கள் மிகவும் வேகமானவை. அவற்றை நிறைவேற்றுபவையாக முன்பள்ளிக் கல்விசார் செயற்பாடுகள் அமைதல் பிள்ளையின் மனநிலை, விருப்புக்கு பொருந்துபவையாக அமையும். பெற்றோரின் ஒத்துழைப்பு கிடைத்ததைப்போல முன்பள்ளி ஆசிரியரின் ஒத்துணர்வு வெளிப்பாடு பிள்ளையினால் இயல்பாக எதிர்பார்க்கப்படுகின்றது.

மனிதனின் ஆளுமை விருத்தியில் அடித்தளம் இடப்படும் காலம் 0-5 வயது வரையாகும். இக்காலத்தில் மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி துரிதமாக ஏற்படும். 75 வீத மூளை விருத்தியும் இக்காலப்பகுதியில் ஏற்படும். மொழிசார் தொடர்பாடலைக் கட்டியெழுப்புதலில் பிள்ளை 1-5 வயதான காலப் பகுதியில் 03-2072 வரையான சொற்களை உள்வாங்கிக்கொள்ளும் என மடோனா ஸ்மித்தின் ஆய்வு அறிக்கை கூறுகிறது. பிள்ளையின் மனம் எவ்வாறு இக்காலப் பகுதியில் பண்படுத்தப்படுகின்றதோ அதுவே பிற்கால வளமான வாழ்வியலுக்கு மைய்த்தளமாக அமைகிறது.

### முன்பிள்ளைப் பருவ வகைப்பாடு

★ பிள்ளை கருவுற்ற காலத்திலிருந்து 03 வயது வரையான காலப்பகுதி.

இக்காலப் பகுதியில் பெற்றோரின் வீட்டுக் கல்வி என்ற அமைப்பில் மகப்பேற்றுத் தாய்மார், பாலூட்டும் தாய்மார் பிள்ளைகளின் போசாக்கு, உடல் உளமேம்பாடு, சுகாதாரம், பராமரிப்புத்தன்மை, கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல், அடிப்படை எண்ணக்கரு விரிவாக்கத்தை ஏற்படுத்தல் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

★ 03-05 வயதுக்குட்பட்ட பிள்ளைப்பருவக்

அட்டவணை - 03

| கல்வி நிர்வாக மாவட்டம் | முன்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1125 | 846 |
| கிளிநொச்சி | 231 | 225 |
| முல்லைத்தீவு | 239 | 135 |
| மன்னார் | 223 | 170 |
| வவுனியா | 343 | 300 |
| திருகோணமலை | 552 | 379 |
| மட்டக்களப்பு | 915 | 616 |
| கல்முனை | 707 | 360 |
| அம்பாறை | 416 | 262 |
| | 4751 | 3293 |

(மூலம் - வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு - 2004)

2809 இயங்கிவருகின்றன. அதில் 398 சிங்கள மொழி மூலமமைந்த நிலையங்களும் இரண்டாயிரத்து 411 தமிழ் மொழிமூலமமைந்த முன்பள்ளி நிலையங்களும் உள்ளடங்குகின்றன. மேலும், 4751முன்பள்ளி ஆசிரியர்களும் 81 ஆயிரத்து 88 முன்பள்ளிப் பிள்ளைகளும் கற்றல், கறபித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை அட்டவணை 1,2, மேலும் உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

### முன்பள்ளிக் கல்விசார் இடர்பாடுகள்

வடக்கு - கிழக்கைப் பொறுத்தமட்டில் முனபள்ளிக் கல்வி அமைப்பு மேற்கூறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தற்போது இயக்கம் பெற்று வந்தாலும் அதனுடைய செயறறின் வினைத்திறனுடன் இருக்கின்றதா எனப் பகுத்தாராய்ந்து பார்த்தால் அதன் உண்மை நிலையை உணரமுடியும். இதனடிப்படையில் முன்பள்ளிக் கல்விசார்ந்த பிரச்சினைகள் பின்வருமாறு அமைகின்றதைக் காணலாம்.

★ அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் முன்பள்ளிக் கல்வி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றமையைக் காணலாம். உதாரணமாக - கட்டடம், தளபாடம், மலசலகூடம், விளையாட்டு முற்றம் இன்மை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

★ முன்பள்ளி நிலையங்களின் இடவசதி பிள்ளையின் இயல்பான செயற்பாட்டிற்குப் போதிய அளவில் இன்மை.

★ வடக்கு - கிழக்கு பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் சமநிலையற்ற வளப்பகிர்வு இடம்பெறலும், அபிவிருத்தி செயற்பரிமாணம் முன்னெடுக்கப்படுதலும், பிரதேச ரீதியான சமநிலை தளம்பல் முன்பள்ளிக் கல்வியில் ஒப்பீட்டு ரீதியில் இடம்பெறுதலும்.

★ திட்டமிடப்பட்ட வகைப்பாட்டில் முன்பள்ளிக் கலைத்திட்ட அமைப்பு ஒழுங்குபடுத்தப்படாமை, ஆசிரியர், பிள்ளைகள் கற்றல் கற்பித்தல் செயலில் சமநிலையற்ற தன்மைக்கு உட்படுத்தப்படுகின்றமையை அவதானிக்கலாம்.

★ முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதியளவு பயிற்சியின்மை. எண்ணிக்கை அளவிலும், வினைத்திறன் அடிப்படையிலும் பின்னிலையிலேயே அமைவதுடன், ஆசிரியர் தன்னுடைய தயார்ப்படுத்தலைத் தானே செய்ய இயலுமற்ற தன்மை நிலவுகின்றது எனலாம். அதனை அட்டவணை 03 புலப்படுத்துவதாக அமைகின்றது.

★ முன்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியரின் கல்வித்தகைமை போதியளவு பெற்றதாக அமையாமை அவர்களின் செயற்பாட்டில் அவற்றின் செல்வாக்குக் கணிசமாக இடம்பெற வாய்ப்புண்டு.

ஜி.சீ.ஈ உயர்தரம் சித்திபெற்ற ஆயிரத்து 64 ஆசிரியர்களும், ஜி.சீ.ஈ. சாதாரணதரம் சித்திபெற்ற இரண்டாயிரத்து 114 ஆசிரியாகளும் தரம் 10இற்கு குறைவாக சித்திபெற்ற ஆயிரத்து 573 ஆசிரியர்களுமாக மொததம் நாலாயிரத்து 751 ஆசிரியர்களும் உள்ளடக்கப்படுகின்றனர்.

ஆசிரியர்கள் வேதனம் எதுவும் பெறாமலும் வேலைசெய்து வருவதை தரவுகள்மூலம் அறிய முடிகிறது.

★ முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், தரம் ஒன்று ஆசிரியர்களுக்கும் இடையில் நேர்மயமானதும், நெருக்கமான உறவின்மை பிள்ளையின் மேம்பாட்டில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு தாக்கத்தை ஏற்படுததுகிறது எனலாம்.

★ இவ் ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத்தை மேலும் படிப்படியாக விருத்திசெய்து கொள்ள சந்தர்ப்பங்களோ, செயற்றிட்டங்களோ நடைமுறையில, ஒப்பீட்டு ரீதியல் குறைவாகவே காணப்படுதல்.

★ பயிற்சிபெற்ற, பயிற்சி பெறாத ஆசிரியர்கள் படிப்படியாக வேறு தொழில்களை விரும்பிச் செல்லும் தன்மையாகவும், பொழுதுபோக்கு வேலையாகவும் இதனைப் பயன்படுத்தும் போக்கை காணமுடிகின்றது.

★ முன்பள்ளிச் சமூகத்தினருக்கும் பெற்றோர்க்கும் இடையில் சுமுகமான உறவு நிலவாமையும், அதனால் அவர்களுக்கு இக்கல்வி பற்றிய முக்கியத்துவம், விழிப்புணர்வு இயல்பு குறைவாகவே காணப்படுகின்றது.

★ அரசு முன்பள்ளி நிலையப் பொறுப்புரிமையை தனது அதிகார வரையறைக்குக் கீழ் கொண்டுவராமை இக்கல்வி பற்றிய அக்கறையின்மை, நம்பிக்கையின்மை சமூகத்தின் மத்தியில் நிலவுகின்றது. முன்பள்ளி நிலையத்தில் காணப்படுகின்ற தளபாடம், பௌதிக வளம், கற்றல், உபகரணம் இன்மை, விளையாட்டு உபகரண வசதியீனங்கள் இக்கல்வயில் நேரடியான தாக்கத்தை விளைவிக்கின்றன எனலாம்.

சிங்கள மொழிமூல முன்பள்ளிகள் — அட்டவணை - 02

| கல்வி நிர்வாக மாவட்டம் | முன்பள்ளி எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|
| வவுனியா | 18 | 29 |
| திருகோணமலை | 123 | 186 |
| கல்முனை | 04 | 08 |
| அம்பாறை | 253 | 416 |
| | 398 | 639 |

(மூலம் - வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு - 2004)

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர், யா/சரவணை சின்னமடு றோ.க.த.க. பாடசாலை

★ பிள்ளைகளிடம் காணப்படும் உடல், உளம் சார்பான குறைபாடுகளும் பாதிப்புணர்வுகளும், முன்பள்ளிக் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றன. மாகாணக் கல்வி அமைச்சின் 2003 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் பின்வருமாறு இதனை உறுதிப்படுத்துகின்றது.

| | | |
|---|---|---|
| கண்குறைபாட்டுடன் | 142 | பிள்ளைகளும் |
| செவிப்புலக்குறைபாட்டுடன் | 170 | பிள்ளைகளும் |
| மனவளர்ச்சிக் குறைபாட்டுடன் | 138 | பிள்ளைகளும் |
| உடல்ஊனத்துடன் | 92 | பிள்ளைகளும் |

★ போரியல் சூழல்நிலையினால் உயர்பாதுகாப்பு வலயம், யுத்தபிரதேசங்களில் பல்வேறு எண்ணிக்கையான முன்பள்ளி நிலையங்கள் இயங்கமுடியாதநிலையில் இருந்து வருதலையும், தற்போது சில மீளஇயக்கம் பெற்று வருவதையும் காணமுடிகின்றது. இவற்றினது தாக்கம் முன்பள்ளிக்கல்வியில் பெரியளவில் இடம் பெற்றுள்ளது எனலாம்.

(தொடரும்.)

# இலவச மருத்துவ சேவையும் நற்செய்திக் கூட்டங்களும்

தென்கொரிய தேசத்திலிருந்து வரும் வைத்திய நிபுணர்கள் இலவச மருத்துவ சேவை வழங்குகிறார்கள்

இடம்: இம்மானுவேல் சுவிசேஷ சபை மண்டபம்
புதிய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

## மருத்துவ சேவை வழங்கப்படும் நாள்களும் நேரமும்

| | |
|---|---|
| 03.08.2004 | செவ்வாய் பிற்பகல் 03.00 மணி தொடக்கம் 06.00 மணி வரை |
| 04.08.2004 | புதன் காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை |
| | பிற்பகல் 02.00 மணி தொடக்கம் 05.00 மணி வரை |
| 05.08.2004 | வியாழன் காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |
| 06.08.2004 | வெள்ளி காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |
| | பிற்பகல் 02.00 மணி தொடக்கம் 05.00 மணி வரை |
| 07.08.2004 | சனி காலை 09.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை |
| | பிற்பகல் 02.00 மணி தொடக்கம் 05.00 மணி வரை |

## நற்செய்திக் கூட்டங்கள் நடைபெறும் நாள்களும் நேரமும்

| | |
|---|---|
| 06.08.2004 | வெள்ளி மாலை 05.30 மணி தொடக்கம் 07.00 மணி வரை |
| 07.08.2004 | சனி மாலை 05.30 மணி தொடக்கம் 07.00 மணி வரை |
| | காலை 09.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை |
| 08.08.2004 | ஞாயிறு மாலை 05.30 மணி தொடக்கம் 07.00 மணி வரை |

தகவல்:
போதகர் தேவதாஸ் அன்ரன்,
இம்மானுவேல் சுவிசேஷ சபை,
புதிய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (34894)(29-17-14)


# வாகன வேகம் குறித்து சாவகச்சேரி மக்கள் புகார்!

சாவகச்சேரி,ஓக.3

யாழ்.கண்டி வீதியில் சாவகச்சேரி நகரில் வேகக் கட்டப்பாட்டு - அறிவிப்புப் பலகைகள் மற்றும் சமிக்ஞைக் குறியீடுகள் நடுகை செய்யப்பட்டுள்ளபோதிலும் வாகனச் சாரதிகள் அவற்றைக் கருத்தில் கொள்ளாது வாகனத்தைச் செலுத்துவதாகப் பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி நகரில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து - நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் வரையிலான பகுதியில் 40 கிலோமீற்றர் வேகத்திலும் அதற்கு அப்பாற்பட்ட பகுதியில் 50 கிலோமீற்றர் வேகத்திலும் பயணஞ்செய்யலாமென வேகக்கட்டுப்பாட்டு அறிவிப்புப் பலகைகள் நடுகை செய்யபபட்டுள்ளன. ஆனால், வாகனச் சாரதிகள் இவற்றைக் கவனத்திற் கொள்ளாமல் வாகனத்தைச் செலுத்துகின்றனர் என்றும் .

இதனால் சாவகச்சேரி நகர வீதிகளில் பீதியுடன் பயணஞ்செய்ய வேண்டியுள்ளதாகவும் - பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (எ-31)

## ஏழாலை வீதி புனரமைப்பு

ஏழாலை மத்தி ஏழு கோவில் வீதி, சுமார் 25 வருடங்களின் பின் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

1995 ஆம் ஆண்டு 'கைகுலுக்கல்' இராணுவ நடவடிக்கையை அடுத்து இந்த வீதி தொடர் இராணுவ மணல் அணையாக இருந்து வந்தது.

தற்போது மக்கள் இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ளதை அடுத்து இந்த மணல் அணை அகற்றப்பட்டிருந்தது.

தற்போது வலி.தெற்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. (எ-45)

## வகுப்பறை நிறுவ நிதி ஒதுக்கீடு

வரணி, இயற்றாலை அமெரிக்கமிஷன் தமிழ்க கலவன் பாடசாலையில் ஆரம்பப் பிரிவு வகுப்பறை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-170)

## நியமனம் கிடைக்காமை குறித்து வடமராட்சி கிழக்குப் பட்டதாரிகள் விசனம்

வடமராட்சிகிழக்கு,ஓக.3

பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பட்டியலில், வடமராட்சி கிழக்குப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக அப்பகுதிப் பட்டதாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கல் தொடர்பாக நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சுமார் 30 பட்டதாரிகள் தோற்றியிருந்தனர்.

யாழ்மாவட்டத்தில் மிகக் கஷ்டப்பிரதேசமான வடமராட்சி கிழக்கிலிருந்து, பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு, பட்டதாரிகளாக வெளியேறிய பல மாணவர்கள் பல வருடங்களாக வேலை வாய்ப்பிற்காகக் காத்து இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-182)

## ஆலய வீதி விஸ்தரிப்பு

சுழிபுரம்,ஓக.3

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய வடக்குப் பக்க வெளிவீதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் வடக்குத் திசையில் வசிக்கும் காணியின் உரிமையாளர் இருவர் தமது சொந்தக் காணியை அம்பாளுக்கு வழங்கியதைத் தொடர்ந்து வீதி விஸ்தரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-28)

## தமிழீழ வரலாற்றுத் தேர்வில் பூநகரி ம.வி. மாணவன் சாதனை

வடமராட்சிகிழக்கு,ஓக.3

பூநகரி மகாவித்தியாலய மாணவன் ஒருவன தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற தமிழீழ வரலாற்றுத் தேர்வில் மூன்றாவது தடவையாக தேசிய மட்டத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

பூநகரி மகாவித்தியாலயத்தில் தரம் 8இல் கல்விகற்கும் உதயசூரியன் அனுராஜ் என்ற மாணவனே இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் 6ஆம், 7ஆம் தரங்களில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றதுடன், இவ்வருடம் 8ஆம் தரத்திலும் இவர் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் கல்வி அமைச்சினால் நடதத்தப்பட்ட சமூகக்கல்வியும் வரலாறும் பாடப் போட்டியிலும் அகில இலங்கை ரீதியில் இந்த மாணவன் முதலிடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சாதனைகளைப் புரிந்தமைக்காகத் தமிழீழ கல்விக்கழகம் விரைவில் இவருக்குத் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கவுள்ளது.(எ-182)


**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**விசேட பொதுக்கூட்டம்**

தலைவர்: திரு.பொ.சுந்தரலிங்கம்
இடம்: பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம்: 14.08.2004 சனிக்கிழமை மாலை 4 மணி

அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.பொ.சுந்தரலிங்கம், (தலைவர்)
திரு.பா.கிருபாகரன்
திரு.ம.மணிசேகரன் (இணைச் செயலாளர்கள்)
(34819)(34-21-19-15)

**ஆறாம் மாத நினைவஞ்சலி**

தாயின் மடியில் 19 - 10 - 1984



அலையின் பிடியில் 08 - 02 - 2004

செல்வன் மங்களராஜன் யாதவன்
(வவுனியா தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவன்)
திதி: 03.08.2004

எம் சுமையை நீ சுமந்து
நிழல் தருவாய் என்றிருந்தோம்
கடல் அலையாய்க் காலனவன்
உனைக் கவர்ந்து சென்றானே!
விதி வலிது; தெரிகிறது
வேதனையில் வாடுகிறோம்
ஆறு திங்கள் கடந்தாலும்
தேறுதில்லை எம் மனது!

353/4, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.

ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, உடன்பிறப்புகள்.
(சி-36688)(34-21-)

**வீட்டுக்கிருத்திய அழைப்பு**

மலர்வு 08 - 04 - 1928



உதிர்வு 05 - 07 - 2004

அமரர் இலச்சுமிப்பிள்ளை விஸ்வலிங்கம்

இன்று (03.08.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள எமது தாயாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

திரு.வி.கதிர்வேலு
(சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்க நிறைவேற்றுகாமையாளர்)
குடும்பத்தினரும், சகோதரர்களும்.
(34813)(34)

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



செல்வி துஷ்ஜந்தி (ஜெனோ)

தோற்றம் 03-10-1978 மறைவு 07-08-2001
திதி: 03-08-2004

பொட்டணிந்து பூவணிந்து
மங்கலமே காணாமல்
நீ பட்ட மரமாகிப் போய்ச்
சேர்ந்தாயே?
எத்தனை கனவுகளைக் கண்டோம் - நாம்
நிஜமாக்காமல் நீ ஏனம்மா ஓடி மறைந்தாய்!

லேனாபள்ளம், மிருசுவில்.

என்றும் உன்நினைவுடன்:
அப்பா: துரைமணி, அம்மா: சறோ,
தம்பிமார், தங்கை.
(34805)(34-21-15-19)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 27 - 11 - 1934



உதிர்வு 17 - 07 - 2003

அமரர் வைரமுத்து செல்வராசா

மனிதப்பிறவி எடுத்து மாணிக்கமாய்த் திகழ்ந்தீர்!
புனிதப்பணி செய்து நல்ல புகழுடனே வாழ்ந்தீர்!
எந்நாளும் உம்மை நினைந்தே இப்பூவுலகில்
நாம் வாழ்கின்றோம் ஆத்மசாந்தி வேண்டி.

நாளை (04-08-2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெடுங்கன்னி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்.
(34816)(21-19-15) (சி-36688)(34-21-)

**B.S.M.S. பட்டதாரிகளின் கவனத்திற்கு**

B.S.M.S. பட்டதாரிகள் தங்களின் சுய விவரக் கோவைகளை 07.08.2004 இற்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:
Dr.க.ஸ்ரீதரன்
651, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2537
(34821)(34-21-19-15)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மலர்வு 14 - 09 - 1928



உதிர்வு 04 - 07 - 2004

அமரர் சுப்பையா அன்னலக்சுமி
(ஓய்வு பெற்ற தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

அன்பையும் பண்பையும் பாசத்தையும்
பரிவுடன் காட்டிய எம் குல விளக்கே!
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் உடல் இவ்வுலகை விட்டு மறைந்தாலும்
எங்கள் நினைவு என்றும் உங்களோடு.

இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (03.08.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

49/50, கலைமகள் வீதி,
நல்லூர்,
கல்வியங்காடு.
(34786)(43)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சிறுதானியச் செய்கையை மேற்கொண்டால் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்




ஒரு நாட்டின் விவசாய வளர்ச்சி என்பது அந்த நாட்டின் விவசாயிகளிலோ, விவசாயத் திட்டங்களை அமைப்பதிலோ, பரிபாலனம் செய்பவர்களிலோ மட்டும் தங்கியிருப்பதில்லை.

விவசாயத்துறையில் வளர்ச்சி மாற்றம் ஏற படுவதற்கு அந்த நாட்டில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள், சமூக, பொருளாதார மாற்றங்கள், மக்களின் மனோநிலை மாற்றங்கள், கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகள் போன்றவையும் காரணிகளாக அமைகின்றன.

எமது பிரதேசத்து விவசாயம் வளர்ச்சிபெற வேண்டுமானால் இன்றைய அரசியல் கொள்கைகள், பொருளாதாரக் கொள்கைகள், மக்களின் மனநிலைகள் அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நடைமுறைகள் போன்ற விடயங்களில் மாற்றங்கள் ஏற்பட[illegible] [illegible]ிய தேவையுள்ளது.

மக்களுடைய மனநிலை மாற்றத்தில் முக்கிமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டியது உணவுத் தேவை பற்றியதாகும்.

ஆசிய பிராந்தியத்தில் பலநாட்டவர்களாலும் பிரதான உணவாகக் கொள்ளப்படுவது நெல் அரிசிச் சோறாகும். உலக அரிசி உற்பத்தியில் 90 வீதமான நெல் ஆசிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதுடன், அவற்றின் பெரும் பகுதி அந்தந்த நாட்டு மக்களால் உணவாகப் பயன்படுத்திப்படுகின்றது. மேலதிக உணவுத் தேவைக்காக - பற்றாக்குறை உணவுக்காக - வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்து கோதுமை, மா இறக்குமதி செய்யப்பட்டு உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

காலநிலை மாற்றங்களாலும் கடும் வரட்சி, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் சுயதேவைக்கான நெல் உற்பத்தியில் பெருமளவு பாதிப்புகள் ஏற்படுகின்றன. அரிசிப் பற்றாக்குறையை நீக்கப் பெருமளவு பணத்தைச் செலவிட்டு வளர்ச்சிபெற்ற நாடுகளில் இருந்து கோதுமை மா விலை கொடுத்து வாங்கப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரை அரிசி மற்றும் மாப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டை ஈடு செய்ய அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் போட்டியிட்டுக் கூடியவிலைகொடுத்துத் தொடர்ந்து வாங்க முடியாத நிலையில் உள்ளோம்.

இந்த நிலையில் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயநிலை எம் அனைவருக்கும் உண்டு.

**உணவு முறைகளில் மாற்றம்**

முன்னைய காலங்களில் எமது மூதாதையர்கள் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுப் பெரும் முன்னேற்றம் கண்டிருந்தனர். அந்நிய நாட்டவர்களின் வருகை, அவர்களின் தூண்டுதல், அந்நிய நாகரிகத்தில் ஏற்பட்ட கவர்ச்சி அவற்றைக் கடைப்பிடிப்பதில் ஏற்பட்ட மகிழ்ச்சி போன்றவற்றால் எமது பாரம்பரிய பயிர்ச்செய்கைகளையும் உணவு வகைகளையும் கைவிட்டு, உணவுத் தேவைகளுக்கு அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கோதுமை மாவைப் பயன்படுத்தத் தொடங்கினர் நம்மவர்கள்.

குரக்கன், சாமை, பயறு, சோளம் போன்ற சிறுதானியச் செய்கை கைவிடப்பட்டது. கூடிய வருமானம் தரக்கூடிய பயிர்களான வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்றவற்றைக கூடிய பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் செய்கைபண்ண ஆரம்பித்தனர்.

பல்லாண்டு காலமாகக் கைக்கொள்ளப்பட்டு வநத சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை முறை கூடக் கைவிடப்பட்டது. பணப்பயிர்களே தொடர்ச்சியாகப் பயிரிடப்பட்டு வந்தன. இவற்றால் எமது மண்வளம் பழுதடைந்தது. பயிர்கள் பல்வேறு நோய்த்தாக்கத்துக்குள்ளாகின.

பயிர் வளர்ச்சிக்கும் அதிகரித்த விளைச்சலுக்குமாக இயற்கைப் பசளைகளைக் கைவிட்டு இரசாயனப் பசளைகள் அதிகளவில் உபயோகிக்கப்பட்டன. இரசாயன பசளைப் பாவனையாலும் கிருமிநாசினிப் பாவனையாலும் உற்பத்திப் பொருள்களை அதிககாலம் பாதுகாத்துவைக்க முடியாதநிலை ஏற்பட்டது. அத்துடன், இரசாயன கலவைகள் சேர்ந்த உணவுப் பொருள்களை உண்பதனால் மக்கள் பல்வேறுபட்ட நோய்த் தாக்கங்களுக்கும் உள்ளாகிவருகின்றனர்.

பயிர்களில் ஏற்படும் பூச்சித் தாக்கம், நோய்த தாக்கம் என்பவற்றைக் கட்டுப்படுத்த நச்சுத் தன்மை செறிந்த இரசாயனப் பசளை, கிருமி நாசினிப் பாவனைகளைக் குறைத்து, விவசாயிகள் மாட்டெரு, கூட்டெரு போன்ற இயற்கைப் பசளைகளையும் கிருமிநாசினிகளையும் பயன்படுத்த முன்வர வேண்டும். உருவாக்கப்படும் விவசாயத்திட்டங்கள் வெற்றிபெறவும், விவசாயிகளும், பொது மக்களும் பொருளாதார வளர்ச்சி பெறவும் உற்பத்தி நிலையிலும் நடைமுறைகளிலும் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப் படவேண்டும்.

★ சுதேசிய உணவுப் பொருள்களையும் சிறுதானியப் பயிர்களையும் உணவுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் மனநிலை மாற்றம் ஏற்படவேண்டும்.

★ கோதுமை போன்ற மாப்பொருள்களைக் கைவிட்டுக் குரக்கன், சாமை, உழுந்து, வரகு போன்ற தானிய வகைகளை உணவுக்காகப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

★ நெற்செய்கையைத் தொடர்ந்து சிறுதானியப் பயிர்வகைகளைப் பயிரிடவேண்டும்.

★ விவசாய நிலங்களில் பணப்பயிர்களையே தொடர்ச்சியாகப் பயிரிடமால் சுழற்சி முறையில பல்வேறு பயிர்களைச் செய்கை பண்ணவேண்டும்.

★ அதிக செலவையும் கேடுகளையும் தரக்கூடிய இரசாயனப் பசளைகள், கிருமிநாசினிகள் பாவிப்பதைக் குறைக்கவேண்டும்.

★ இயற்கைப் பசளைகளையும் கிருமிநாசினிகளையும் உபயோகப்படுத்தவேண்டும். விவசாயம் தொடர்பான நிறுவனங்களும், விவசாயிகளும் இணைந்து திட்டமிட்டு, மட்டுப்படுத்திய அளவில் பயிர்ச்செய்கையில் ஈடுபடவேண்டும்.

சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய நவீன தொழில்நுட்ப ஆலோசனைகள், பயிச்சிகள் என்பன விவசாயத் திணைக்களங்களாலும, உத்தியோகத்தர்களாலும் விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டும்.

**போஷாக்கு நிறைந்த சிறுதானியப் பயிர்கள்**

**குரக்கன்:**

உவ்வலய சிறுதானியப் பயிர்களுள குரக்கன் முதலிடம் வகிக்கிறது. அரசி மற்றும் கோதுமை எனபவற்றைவிடக் கூடியபோஷாக்குக் கொண்ட பயிர். கடும் உழைப்பாளர்களுக்கும் நீரிழிவு நோயாளாகளுக்கும் மிகச்சிறந்த உணவு.

குரக்கன் பயிர் பூச்சிகளாலோ நோய்களாலோ தாக்கப்படுவது மிகக்குறைவு. குரக்கன் ஒட்டு கால்நடைகளுக்குச் சிறந்த உணவாகப் பயன்படுகிறது. குரக்கன் பயிரில் கூடுதலான மட்டம் வெடித்து அதன் கணுக்களில் இருந்து கிளைகள் வளர்ந்து அதிகரித்த விளைவைத்தருகிறது.

மூன்று தொடக்கம் ஐந்து மாதகாலம் வரை வளரக்கூடிய குரக்கனில் பல இனங்கள் உள்ளன. குட்டையான இனங்களும் உள்ளன. வர்க்கங்களுக்கேற்ப அவற்றின் மணிகள் சிவப்பாகவும் கறுப்பாகவும் காணப்படுகின்றன. A-43, MI-301, MI-302 போன்ற வர்க்கங்கள் கூடிய விளைச்சலைத்தரக்கூடியன.

குரக்கன் ஈரலிப்பை விரும்பும் ஒரு பயிர் இருப்பினும், உலர்வலயத்திலும் பயிரிடலாம். 20-25 அங்குல மழைவீழ்ச்சி இதற்குப்போதுமானது. நாற்றுமேடை அமைத்து பயிர்வளர்ந்த பின் பிடுங்கி நடலாம். நடுகையின்போது நிரல்களாக நட்டால் களைகளை அகற்றுவது சுலபம். அமோனியம் சல்பேற், அடர்சுப்பர் சல்பேற், பொட்டாஸ் போன்றவற்றைத் தேவைக்கேற்ப பசளையாகப் பயன்படுத்தலாம். நன்கு செய்கை பண்ணப்பட்ட நிலத்தில் இருந்து ஒரு ஏக்கருக்கு 750-1000 கிலோ வரை விளைவைப்பெறலாம்.

**தினை:**

ஈரலிப்புத்தன்மை நிலத்தில் காணப்படின் தினை வளர்ச்சிபெறும். குறைவான மழைவீழ்ச்சியுள்ள இடங்களுக்குப் பொருத்தமான பயிர் 3-4 அடி உயரம் வரை வளரும். கதிர்கள் 6-12 அங்குலம் வரை நீளமாகக் காணப்படும். இதன மணிகள் மஞ்சள், இளஞ்சிவப்பு நிறங்களைக் கொண்டவையாக இருக்கும். 10 செ.மீ. இடைவெளிகளில் நிரல்களாக நடுகை செய்யலாம். மூன்று மாதத்தில் அறுவடை செய்யலாம்.ஒரு ஏக்கருக்கு 500-750 கிலோ விளைவைப் பெறலாம்

**சாமை:**

2½ அடி உயரம் வரை வளரும். வைக்கோல்களைக் கால்நடைகள் விரும்பி உண்ணும். வரடசியைத் தாங்கக்கூடிய பயிர். 8-10 அங்குல மழை வீழ்ச்சி போதுமானது. ஒரு அடி இடைவெளி நிரைகளில் விதைக்க 5 கிலோ விதை தேவைபடும். ஒரு ஏக்கருக்கு 850-900 கிலோ விளைவைத்தரும்.

**வரகு:**

முன்னைய காலங்களில் அமோகமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட வரகு இப்பொழுது முற்றாகக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. குரக்கனைப் போன்று வரகும் நீரிழிவு நோயாளிகளுக்குச் சிறந்த உணவு.

இரண்டு அடி வரை வளரும் பயிர். ஏனைய

**பரிபூர்ணா**

சிறுதானியங்களை விடக் கூடுதலாக வரட்சியைத் தாங்கக்கூடியது. ஓர் ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவைப்படும். 6 மாதங்களில் ஓர் ஏக்கரில் இருந்து 300-400 கிலோ வரகைப் பெறமுடியும்.

தினை, சாமை, வரகு போன்றவற்றுக்கு குரக்கன் பயிருக்குப் பயன்படுத்தும் பசளைகளைப் பயன்படுத்தலாம். சிறுதானியப் பயிர்கள் வரட்சியைத் தாங்குவதோடு ஓரளவு ஈரலிப்பையும் சகிககக்கூடியவை. வளம் குறைந்த தரைகளில்கூட நல்ல விளைவைத் தரக்கூடிய வல்லமை கொண்டவை. நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களிலும் பெரும்போகத்தில் பயிரிட்டுப் பயன்பெறலாம்.உரியநேரத்தில் விதைத்துத் தேவைக்கேற்ற பசளைகளைக் கொடுத்தால் பெருவிளைச்சலைப் பெறலாம். தரிசாகக் கிடக்கும் நிலங்களிலும் மானாவாரி மேட்டு.வயல்நிலங்களிலும் சிறுதானியப் பயிர்களைப் பயிரிட்டால் நெற்செய்கை மூலம் பெறப்படும் வருமானத்திலும் பார்க்கக் கூடிய வருமானத்தையும் இலாபத்தையும் பெறலாம். இவற்றுக்குரிய பசளைகள் இடப்படாமையாலேயே அதிக விளைவைப் பெறமுடியாமல் உள்ளது. சேதனப் பசளைகளுடன் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்படும் இரசாயனப பசளைகளை அளவோடு உபயோகித்தால் சிறுதானியப் பயிர்களில் இருந்து அமோக விளைச்சலைப பெற்றுக்கொள்ளமுடியும். ▲

**தானிய வகைகளில் போஷாக்குப் பாகுபாடு**

| | ஈரலிப்பு வீதம் | புரதம் வீதம் | மாச்சத்து வீதம் | கொழுப்பு வீதம் | நார்ப்பொருள் வீதம் | தாதுப்பொருள் வீதம் | சுண்ணாம்பு வீதம் | பொஸ்பரஸ் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 13.2 | 7.4 | 77.2 | 0.7 | 0.3 | 0.9 | - | - |
| குரக்கன் | 12.4 | 7.6 | 77.7 | 1.3 | 1.7 | 2.4 | - | - |
| தினை | 12.8 | 12.9 | 68.7 | 2.9 | 0.2 | 2.4 | 0.3 | 0.3 |
| சாமை | 11.1 | 13.4 | 72.3 | 1.8 | 0.1 | 1.0 | 0.2 | 0.3 |
| வரகு | 12.4 | 12.4 | 69.5 | 2.6 | 0.3 | 3.4 | 0.1 | 0.3 |
| சோளம் | 12.8 | 7.2 | 77.8 | 3.9 | 1.2 | 1.0 | - | - |
| இறுங்கு | 9.4 | 7.7 | 74.9 | 3.9 | 1.3 | 2.9 | - | - |

# மறைந்திருந்த அநீதிச் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன

## அறவழிப் போராட்டக் குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.3

நாட்டில் கடந்த இரண்டு தசாப்தங்களாக மறைந்திருந்த சமூக அநீதிகள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

அறவழிப் போராட்டக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் சுமைடைந்து தமிழ்ச் சமூகம் தலைநிமிர்ந்து வாழும நிலை நோக்கி நகர்கின்ற இவ்வேளையில், மீண்டும் தமிழ்ச் சமூகத்தையும் கூறுபோடுகினற வகையில் கடந்த இரு தசாப்தங்களாக மறைநதிருந்த சமூக அநீதிகள், மனித உரிமை மீறல சம்பவங்கள் மீண்டும் ஆங்காங்கே தலைதூக்க ஆரம்பித்துள்ளன. இதனை எமது அறவழிப் போராட்டக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது.

சைவ ஆலயங்களில் மீண்டும் பலியிடுதல் அரங்கேறிவருகின்றது. அதற்குச் சமுதாயத்தில் வாழ்கின்ற ஒரு சில வர்க்கத்தினர் ஆதரவளித்துவருவது குறித்தும் நாம் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். தமிழ்ச் சமுதாயம் வெட்கப்பட வேண்டிய இத்தகைய சமூக அநதியான நிகழ்வுகளை மக்கள் நிராகரிக்க முன்வர வேண்டும்.

அதேபோல யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஒரு சில இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டிற்கு மறுப்புத்தெரிவிப்பதும், பூஜை, பொங்கல்கள் செய்யும் பக்தர்களுக்கு இடையூறு விளைவித்து அவமதிப்பு ஏற்படுத்துவதும் ஆலய தொண்டுப் பணிகளில் ஈடுபடுவதைத் தடுப்பதும் பாரதூரமான மனித உரிமை மீறல்களைகும்.

இத்தகைய நிலைகள் மீண்டும் தலைதூக்கக்கூடிய பக்கச் சார்பற்ற நிலையில் அனைவரது மனித உரிமைகளும் பேணப்படுவதுடன், மதிக்கப்படவும் வேண்டும் என எமது குழு வேண்டிக்கொள்கின்றது.

இதேவேளை, இரு தசாப்த காலத்தில் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமது இருப்பிடங்கள் அழிக்கப்பட்ட நிலையில் அவற்றினைப் புனரமைப்புச் செய்ய முற்படுகின்ற பொதுமக்கள், தமக்கு வேண்டிய மணலை இலகுவாகப் பெறக்கூடிய நிலை மறுக்கப்பட்டு வருவது குறித்தும் எமது குழு மிகுந்த விசனம் கொண்டுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்கள் தமது அழிந்த இருப்பிடங்களை புனரமைத்து புதிய வாழ்வை முன்னெடுக்க அரச அதிகாரிகள் உதவிபுரிய வேண்டியது முக்கியமானதாகும் - என்று அதில் குறிப்பிட்டுள்ளது. (எ-6)

## சிரமதானச் சங்கத்துக்கு சர்வோதயம் நிதியுதவி

கொழும்புத்துறை,ஓக.3

யாழ். மாவட்ட சர்வோதயம் அமைப்பினர் சர்வோதய பொருளாதார அபிவிருத்திச் சேவைகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் கெருடாவில் சிரமதானச் சங்கத்திற்கு 3 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள வறிய மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சிகளுக்கான சுழற்சி முறைக் கடனாக இப்பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது - எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

# புலோலி மேற்குக் கொலை வழக்கு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது

புலோலி மேற்கில் புறாப்பிடிப்பதில் இரு நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் எதிரொலியாக இடம்பெற்ற கொலை தொடர்பான வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி புலோலி மேற்கில் இராசநாயகம் இராஜகுமார் என்பவரைக் கொலை செய்ததாக நவரத்தினம் ஜெகதீஸ்வரன் என்பவருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு சுருக்கமற்ற விசாரணை பருத்தித்துறை நீதிவான் முன் கடந்த வியாழன்று நடைபெற்றது.

எதிரி சார்பில் சட்டத்தரணி விஜயராணி உருத்திரேஸ்வரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி எஸ்.விஜேந்திரனும், அரச தரப்பில் அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமியும் பருத்தித்துறைப் பொலீஸாரும் ஆஜராகியிருந்தனர்.

பலரின் சாட்சியங்கள் பதியப்பட்டு சுருக்கமற்ற விசாரணை முடிந்து வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது.(எ-3)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தரமான Prima Broiler பேட்டுக் குஞ்சுகள உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: க.தன பாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை , முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (34825)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 04.08.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவு களை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. (34791)

### காணி விற்பனைக்கு

இருபாலை றோட் அருகில் இராசபாதை வீதியில் 5 பரப்புக்காணி குழாய்க் கிணற்றுடன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேணடிய முகவரி: திருமதி M.மனோகரன், முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் . T.P.: 0208 551 5159 (U.K.) தரகர் தேவையில்லை.(34818)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 இல் பிறந்த, ரோகினி நட்சத்திரம், கிரக பாவம் 22% உடைய B.A. பட்டதாரி மண மகளுக்குத் தகுந்த வரனைத் தேடுகின்றோம். தொடர்பு: S.ஈஸ்வரி, குமரன் கல்வி நிலையம், நவாலி T.P.: 077 - 6590411. (34820)

### தவறிவிட்டது

24-07-2004 சனிக்கிழமை அன்று வடமராட்சி கரணவாய் உப்புவெளி வீதியில் நிரஞ்சன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் தலைக் கவசம், ஆவணங்கள், விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் மூத்த விநாயகர் கோயிலடி, நெல்லி யடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 077 6150645 (30824)

முற்றவெளிக்கும், நல்லூருக்குமிடையில் மோட்டார் வாகன இன்சூரன்ஸ் வாகனப் புத்தகம் 2004இற்கான வரிப்பத்திரம் (வாகன இலககம்-NPHUO835) அடங்கிய பைல் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் இல.50, சாஸ்திரியார் லேன், அரியாலை என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். T.P.:0776116902. (34815)

கந்தையா சுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 322731191V), மானிப்பாய் கிராமிய வங்கிப்புத்தகம் (184441) மற்றும் முக்கிய ஆவணங்கள் கட்டுடைக்கும் மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரிக்கும் இடையில் 28-06-2004 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள க.சுப்பிரமணியம் C/o R.சிவம், சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய் மேற்கு என்னும் விலா சத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (34802)

பொ.பாலதேவன் என்பவருடைய காரின் றிம்பிளேற் (Rimplate) 31-07-2004 அன்று இணு விலுக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட் டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மானிப் பாய் வீதி, மருதனார்மடம் சந்தியில் அமைந் துள்ள கதிரமலை கடையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 0777 - 6589593 (34808)

# மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வேண்டும்

ஓரளவு முற்போக்குச் சிந்தனைகொண்ட யாழ்ப்பாணச் சமூகத்திற்குள்ளேயே கற்கால இந்துத்துவச் சித்தாந்தங்களிற்குள்ளே இன்ன மும் கட்டுண்டு கிடக்கின்ற ஒரு சமூகப்பிரிவும் இருககத்தான் செய்கிறது என்பதனை அண்மை யில் கவுணாவத்தையில் கடவுளின் பெயரால் நிகழ்ந்த குரூரமான அந்த நிகழ்வு கோடி காட்டி நிற்கிறது.

அறிவியல் வளர்ச்சியின் விளைவாகப் பல சமய மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து முற்போக்கான சமயமாக மாறிவரும்




இன்றைய காலத்திலும் சிலர் இவ்வாறான பழமைவாதச் சித்தாந்தங்களில் சிக்குண்டு கிடப் பது வேதனைதரக்கூடிய ஒரு விடயமாகும்.

அனைத்து உயிர்களினதும் தந்தை இறை வனே என்பதனையும் எல்லா உயிர்களும் இறை வனைப் பொறுத்து வேறுபாடில்லாதவை என்ற இந்துதத்துவக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட இவர்களே தாமும், தமது குடும்பமும் அல்லது தமது ஊரும் உறவுகளும் சந்தோசமாக, சிறப் பாக வாழவேண்டும் என்பதற்காக வாயற்ற அப்பாவி ஜீவன்களை - இறைவனின் இன்னொரு பிள்ளையை அவனிற்கே இரையாக்குவது இறை நிந்தை என்பதனைப் புரியாமல் இருப்பது விந தையானது. இத்தகைய செயலை நீதியானதும், முறையானதும் என நியாயப்படுத்த முனைந் தால் நவாலியில் நடந்தேறிய நரபலியும் நியாயமானதே என்ற அர்த்தத்தைத் தந்துவிடு மல்லவா?

அப்பாவி மனித உயிர் கள் வேறு பிராணிகளின உயிர்கள் வேறு என்பது உலகியல் வாதத்தில் வேண்டுமெனறால் ஏற் கக் கூடியதாக இருக்க லாம். ஆனால், ஆன்மீக வாதத்தில் எல்லா உயிர் களும் ஒன்றே என்பது தான் இந்துதத்துவத் தின் அடிப்படையும் கூட.

இந்த அடிப்படையில் பார்க்க முறபட்டால் அல்லது இந்த அடிப்படையை ஏற்றுக் கொண் டால் நவாலி வேள்விக்கும் கவுணாவத்தை வேள்விக்கும் இடையில் எந்த ஒரு வேறு பாட்டினையும் எந்த ஒரு உண்மையான இந்து ஆன்மீக வாதியாலும் காணமுடியாது.

பிராணிகள் ஒன்றுக்கு ஒன்று இரையாக அமைவது இயற்கையின் நியதியும் இறை வனின் படைப்பும் - அதில் முரண்பாடு இல்லை. ஆனால், இறைவனின் பெயரால் அவனது சந நிதானத்தில் வைத்தே அவனது பாதங்களில் 'அன்பே சிவம்' என்ற இறைவாசகத்தின் முன் னால் ஆயிரத்திற்கும் அதிகமான அப்பாவிப் பிராணிகளின் முண்டங்கள் முனகி முனகித் துடிக்கத் துடிக்கச் சாகடிக்கப்பட்டதில் தான் நிறையவே முரண்பாடு உள்ளது.

என்னைப் பொறுத்தவரை பெரிய துயரம் கவுணாவத்தையில்அரங்கேறிய அந்த நிகழ் வல்ல. மாறாக 'அன்பே சிவம், அன்பே சிவம்' என்று அனுதினமும் உச்சரித்துக்கொண்டு இருக்கும் இந்துமத ஆன்மீகத் தலைவர்களும், இந்துமத பீடங்களும் இந்நிகழ்வினைக் கண் டும் காணாதது போல் இருந்தபடி இதனை வழி மொழிந்து கொண்டிருப்பது தான் உண்மையி லேயே பெரிய துயரமாய் இருக்க முடியும்.

இதுபோன்ற அநாகரிகமான பழமைவாதங் கள் "வழமைகள்" என்ற பெயரில் தொடரப் போகின்றதா? அல்லது அறிவார்ந்த நிலையில் இதனை ஓர் இறை நிந்தையாகக் கண்டு தவிர்க்கப்போகிறோமா? என்பது தான் இன்று ஒவ்வோர் இந்துவுக்கும் முன்னாலுள்ள இவ்வா ல்யப் பிரச்சினை.இறைநிந்தனையா? இல்லை இறை வந்தனையா? யாழிலுள்ள ஒவ்வோர் இந்துவுக்கும் இது சமர்ப்பணம்.

**எஸ்.அதி** யாழ்ப்பாணம்

# சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த மக்களின் மனமாற்றமும் அவசியம்

கோப்பாய்,ஓக.3

சமூக அபிவிருத்தியைச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்திவிட முடியாது. மக்களின் மனமாற்ற மும் சேர்ந்து செயற்பட்டால்தான் அதனை ஏற்படுத்த முடியும் - என்று யாழ்பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் ஆர்.இரட்ணம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அண்மையில நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:

சமூக அபிவிருத்தியை அதிகார ரீதியாகவும் சமூகரீதியாகவும் இருவகையாக மேற்கொள்ள வேண்டும். இதனைக் கட்டாயத்தின் மூலம் செய விக்க முடியாது. இதற்கு உதாரணம கொழும்பு நகர், புறநகர்ப் பகுதிகளில் அடிப் படை வசதிகளற்றிருந்த பல ஏழைத் தொழிலா ளர்களுக்குச சகல அடிப்படை வசதிகளும் கொண்ட மாதிரிக கிராமமொன்றைக் குருநாகல் பிரதேசத்தில் ஏற்படுத்திக் காலஞ்சென்ற ஜனா திபதி பிரேமதாஸ அவர்களைக் கட்டாயப்படுத திக் குடியேற்றியிருந்தார். ஆனால், 6மாதங்கள் கூட அப்பிரதேசத்தில் அம்மக்கள் வசிக்கவில்லை மீண்டும் தமது பழகிய இருப்பிடங்களிற்குத் திரும்பிவிட்டார்கள். இதிலிருந்து சமூகஅபி விருத்தியானது இயற்கையாக மனமாற்றத்தோடு ஏற்படவேண்டியதொன்று என்பது புலப்படுகிறது.

எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் பொறுப்பேற்கும் தன்மைகுறைவு, திறமையை ஏற்பது குன்றவு, தட்டிக்கழிப்பதும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதும் பழகிப்போய் விட்டது. இவைகளை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு தீர்வுகளை முன்னெடுக்கவோ எதிர்க்கவோ முயற்சிப்பது குறைவு. குறிப்பாக எமது இளை யோர் சமூகத்தை அன்பாகவும் அதிகார ரீதி யாகவும் திருத்த வேண்டும்.

சமூக அபிவிருத்திக்குப் பெரும் தடையாக இருப்பது உதவிகள் வழங்கப்படும் நிலையா கும். தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும் போது உழைக்கவேண்டும் என்ற உணர்வு இல் லாமல் போகிறது. இது ஓர் ஆரோக்கியமற்ற நிலையாகும். இவற்றைவிட, தொலைக்காட்சி பாவனையானது சமூக உறவுகளையே பாதிக்கு மளவிற்கு அதன் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுவிட்டது.

தற்போது இளையோர்களிற்கு வெளிநாட்டு மோகம் ஊட்டப்படுகிறது. இதனால் சமூகத்திற குக் கட்டுப்படாதநிலை வளர்கிறது மற்றும் சா வதேச உதவி நிறுவனங்களின் செயற்பாடும் கூட நோக்கம் கொண்டவையாகவே உள்ளன. அவை நமது நாடுகள் ரீதியான செயற்பாட்டைக் கொண்டவையே தவிர எமது சமூகம் சார்ந்தவை யாக இருக்கவில்லை. இவற்றை எல்லாம் கடந்தே எமது சமூகம் செயற்பட வேண்டியுள்ளது - என றார். மேலும் வலிகிழக்கு அரசியல் பொறுப்பாளா மற்றும் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் உட்படப் பலரும் உரையாற்றினர். (ப-72)

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எழுத்தாக்கப் போட்டிகள்

## கல்விக் கழகம் நடத்தும்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஆசிரியர் தினத்தையொட்டி வடக்கு - கிழக் குப் பகுதிகளில் தமிழ்மொழி மூல ஆசிரியர் களுக்கிடையில் எழுத்தாக்கப் போட்டிகளை நடத்துவதற்கு தமிழீழக் கல்விக்கழகம் ஏற்பாடு களைச் செய்துவருகின்றது.

கடந்த வியாழக்கிழமை தமிழீழக் கல்விப் பேரவையின் யாழ்.அலுவலகத்தில் 'விளக்கு' சஞ்சிகையின் ஆசிரியர் செ.மகேஷ் தலைமை யில் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்பில் இது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது.

மாணவச் சமுதாயம் நற்றமிழ் அறிவுடைய வராய் வளரவேண்டுமானால் ஆசிரியர்கள் முன் மாதிரியாகத் திகழவேண்டும் என்றும் -

எனவே, இவ்வாறான போட்டிகள் மிகவும் அவசியமானதாக உள்ளன என்றும் - அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஆசிரியர்களுக்கிடையில் கட் டுரை எழுதுதல், சிறுகதை ஆக்கம், கவிதை ஆக்கம், விமர்சனம் எழுதுதல் போன்ற எழுத் தாக்கப் போட்டிகள் நடத்தப்படும்.

கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங் களைப் பெறுவோர் முறையே 10ஆயிரம் ரூபா, 7ஆயிரத்து ஐந்நூறு ரூபா, 5ஆயிரம் ரூபாவையும்-

சிறுகதை ஆக்கப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் முறையே 10ஆயிரம், 7ஆயிரத்து ஐந்நூறு ரூபா, 5ஆயிரம் ரூபாவையும்-

கவிதையாக்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் முறையே 5ஆயிரம் ரூபா, 3ஆயிரம் ரூபா, 2ஆயிரம் ரூபாவையும் -

விமர்சனம் எழுதுதல் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் முறையே 5ஆயிரம் ரூபா வும் 3ஆயிரம் ரூபாவும் 2ஆயிரம் ரூபாவையும் - பெறுவர்.

தரமான ஆக்கங் களுக்கு சான்றிதழ் வழங் கப்படுவதுடன் அவை 'விளக்கு' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் என்றும் - கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முக தாஸ், மூத்த எழுத்தாளா கலாநிதி சொக்கன், யாழ். இந்துக் கல்லூரி முன் னாள் அதிபர் அ.பஞ்சலிங கம், யாழ்.கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, தமிழர் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர் ஆகியோ ரும் இதில் கலந்து கொண்டனர். (எ-13)

# ஏழாலைத் தோட்டங்களில் மரக்கறிகள் திருட்டு

ஏழாலை,ஓக.3

ஏழாலை மேற்கு, மத்திய பகுதிகளில் கடந்த சில தினங்களாக இரவுவேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக, தோட்டங்களில் மரக்கறி, வாழைக்குலை போன்றவற்றைத் திருடர்கள் திருடி வருவதுடன் சில வீடுகளில் மேற்கொள் ளப்பட்ட திருட்டு முயற்சிகள் மக்கள் விழித்துக கொண்டதை அடுத்து முறியறிக்கப்பட்டதாக வும் தெரிவிக்கப்பட்டது.. (எ-45)


## அகில இலங்கை D.A.M. பட்டதாரிகள் வைத்திய சங்க
## விசேட பொதுக்கூட்டம்

தலைவர்: Dr.S.பரமசிவம்பிள்ளை
இடம்: லங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரி மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: 08.08.2004 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணி
விடயம்:

1) சகல D.A.M. பட்டதாரி வைத்தியர்களையும் அங்கத்தவராக இணைத்துக்கொள்ளு தல். (பட்டதாரிச் சான்றிதழ், ஆயுர்வேத வைத்திய சபைச் சான்றிதழ்கள் என்பவற்றின் போட்டோ பிரதியுடன் சமுகமளிக்கவும்).
2) வைத்தியர்களின் சுயவிவரக் கோவைகளை ஆவணப்படுத்தல்
3) ஆங்கில மருந்துப் பாவனை சம்பந்தமாக ஆராய்தல்
4) மற்றும் பல விடயங்கள்

பல முக்கிய பிரமுகர்கள் இக்கூட்டத்திற்கு வருகைதந்து கலந்துரையாட இருப்பதனால் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

Dr.S.பரமசிவம்பிள்ளை
தலைவர்.

Dr.S.T.சிங்கஅரியரட்ணம்
செயலாளர்.

(34830)(34-21-19-18)



## பெயர் மாற்றம்

ஞானப்பிரகாசம் வீதி, மல்வம் உடுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த துரைசிங்கம் டெனிஸ் ஆகிய நான் எனது பெயரை 02.08.2004 முதல் **துரைசிங்கம் நிவேதா** எனச் சட்ட வரம்புக்கமைய மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

துரைசிங்கம் நிவேதா
ஞானப்பிரகாசம் வீதி, மல்வம்,
உடுவில்.

(34823)(34-21-19-18)



## மரண அறிவித்தல்

### வைத்தியலிங்கம் தருமலிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் தருமலிங்கம் பிரான்ஸில் காலமானார்.

அன்னார் புஸ்பவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைத் தியலிங்கம் - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - துங்கம்மாவின் அன்பு மருமகனும் பாஸ்கரன், காண்டீபன், பார்த்தீபன், காலஞ்சென்ற சூரி மற்றும் இளங்கோபன், விஷ்ணு, கோபி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசா இலட்சுமி, நல்லதங்கம், சிவபாக்கியம், இராசேஸ்வரி (சீதா) ஆகியோ ரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:ந.இலட்சுமி
(சகோதரி),

126/6, அரசடி வீதி
(Ladies College அருகில்),யாழ்ப்பாணம்.

(34822)(34-21-18-19)

# பராகுவே சுப்பமார்க்கெட் ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை பெரும் தீ விபத்து!

## 300 இற்கும் மேற்பட்டோர் கருகி மாண்டனர்!

அசன்சியோன்,ஓக.3

பராகுவே நாட்டில் நேற்றுமுன்தினம் நடநத தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 300ஆக உயர்ந்துள்ளது. தென்அமெரிக்க நாடான பராகுவேயின் தலைநகர் அசன்சியோனில் அடுக்குமாடி சுப்பமார்க்கெட்டில் ஞாயிறு மாலை தீ விபத்து ஏறபட்டது. விபத்து நடந்த சமயத்தில் சுப்பமார்க் கெட்டில் பொதுமக்கள் ஏராளமாக இருந்தனர். தீயில் சிக்கியும் கூட்டநெரிசலில் கீழே விழுந்தும் பலர் உயிரிழந்தனர். 141 பேர் இறந்ததாக முதற கட்டத் தகவலில் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது. 300 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து உடன டியாகத் தெரியவில்லை. பலியானவர்களில் குழந தைகளும், கர்ப்பிணிகளும் அடங்குவர். மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்துவருகின்றன. சுப்பர் மார்க்கெட்டில் வாடிக்கையாளர் நிறைந்து வழிநத வேளையில் காஸ் வெடிப்பு ஒன்றின் காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப் படுகின்றது.

தீ பற்றிய பகுதிக் கடைகளில் சுமார் 600 பேர் வரை இருந்திருக்கிறார்கள் என்று கூறப்படு கின்றது.

கடைகளின் கதவுகளை கடைக்காரர்கள் ஏற்கனவே மூடிவிட்டிருந்ததால் தீப்பற்றியதும் மக்கள் வெளியில் போகமுடியாமல் தீண்டாடினர். பலர் யன்னல்கள் வழியாக வெளியேறினார்கள. கடைகளில் பொருள் வாங்கியவர்கள் பணம் கொடுக்காமல் போய்விடுவார்கள் என்பதற்காக கதவுகள் மூடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. கடைத் தொகுதியின் உரிமையாளர்கள் புலனாய் வாளர்களால் விசாரிக்கப்படுகின்றார்.

தீப்பற்றி நெருப்புச் சுவாலை வெளிப்படுவ தற்கு முன்னர் வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாக நேரில் பார்த்தவர்க்ள் கூறினார்கள். அப்பகுதியி லிருந்த சமையல் பகுதியில் ஏற்பட்ட காஸ் வெடிப் புக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம என்று தீயணைக்கும் படையினர் தெரிவித்தார்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்ற பராகுவே அதிபர் நிக்கானோர் டுவார்ட்டே இது பெரும் துயரத்துக்குரிய சம்பவம் என்று கூறி னார். (ப-8)



சுப்பமார்க்கெட்டில் ஏற்பட்ட தீ விபத்தினால் அப்பகுதி புகை மண்டலமாகக் காட்சியளிப்பதையும், தீயில் கருகிய சடலங்கள் வெளியே வைக்கப் பட்டிருப்பதையும், விபத்தில் காயமடைந்த சிறுவன் ஒருவனை மீட்புப் பணியாளர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதையும் படங்களில் காணலாம்.

## போத்துக்கல்லில் எண்ணெய்க் குழாயில் தீ !

போர்த்துக்கல் வடக்கு நாட்டில் உள்ள எண் ணெய் விநியோகக் குழாயில் ஏற்பட்ட தீ விபத்தில தீயணைப்பு வீரர்கள் எட்டுப் பேர் படுகாயமடைந் தனர். லிஸ்பன் நகரின் வடபகுதியில் லிகாடி பல் மெய்ரா என்னுமிடத்தில் அரசுக்குச் சொந்தமான பெட்ரோகல் எனும் எண்ணெய் சுத்திகரிப்பு மையம் உள்ளது. தொழில் நகரான இங்கு குழாய் மூலம எண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. இங் குள்ள குழாயில் திடீரெனத் தீப்பிடித்தது. தீய ணைப்பு வீரர்கள் தீயை அணைத்துக் கொண்டி ருக்கும் போது மற்றொரு இடத்திலும் தீப்பிடித் தது. இதில் புகைக்குள் சிக்கி மூச்சு விடமுடியா மல் திணறிய எட்டு வீரர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தீப்பிடித்த குழாயில் இன்னும் எண்ணெய் உள் ளது. முழுமையாக அவை நீக்கப்படவுமில்லை. தீயைக் கட்டுப்படுத்தவுமில்லை. இதனால் தீய ணைப்புப் பணி எப்போதுமுடியும் என்று சொல்ல முடியாது. தீக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து முழு விசாரணை நடத்தப்படும் என்று கூறினார், பெட்ரோகல் நிறுவனத்தின் சுத திகரிப்புத் துறை இயக்குநர் ஜோஸ்ரோக்.

## ஈராக்கில் 6 கிறிஸ்தவ ஆலயங்களில் ஒரே நேரத்தில் கார்க் குண்டுத் தாக்குதல்

### 15 பேர் பலி; பலர் படுகாயம்!

ஈராக்கில் 6 கிறிஸ்தவ ஆலயங்களில் ஒரே நேரத்தில் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தது. இதில் 15 பேர் பலியானார்கள்; ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலையில் பிரார்த்தனை நடந்தபோது ஒரே நேரத்தில் பக்தாத் நகரில் 4 கிறிஸ்தவ ஆலயங்களிலும் மொசூல் நகரில் 2 கிறிஸ்தவ ஆலயங்களிலும் கார்க் குண்டுத் தாக் குதல்கள் நடந்தன. முதல் குண்டுத் தாக்குதல் கரடா என்ற இடத்தில் உள்ள ஆர்மீனியன் தேவாலயம் மீது நடந்தது. இந்தத் தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் கத்தோலிக்க சிரியன் ஆலயம் மீது 2ஆவது தாக்குதல் நடந்தது.

2 தாக்குதல்களையும் தற்கொலைப் படையி னர் திட்டமிட்டு நடத்தி இருந்தனர். இந்தத் தாக் குதல்கள் பற்றித் தகவல் கிடைத்ததும் பொலீஸா ரும், தீயணைப்புப் படையினரும் சம்பவ இடங்க ளுக்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

கைகள் துண்டான ஒருவர் உட்பட 15 பேரை படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவர்களில் 2 பேர் பரிதாபமாக இறந்தனர்.

மொசூல் என்ற நகரத்தில் உள்ள ஒரு கிறிஸ் தவ ஆலயம் மீதும் கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இதில் ஒருவர் பலியானார்; பலா படுகாயம் அடைந்தனர்.

இதேபோல் மொசூல் நகரில் மேலும் ஒரு கிறிஸ்தவ ஆலயம் மீதும் கார்க்குண்டுத் தாக்கு தல் நடந்தது. இதில் பலியானவ்கள் எண்ணிக்கை தெரியவில்லை.

ஆனால், பலர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டனர்.

பக்தாத் நகரில் கோல்டின் என்ற ஆலயத் தில் நேற்றுமுன்தினம் மாலை பிரார்த்தனை முடிந்து பக்தர்கள் வெளியே வந்துகொண்டிருந்த னர். அப்போது கார்கள் நிறுத்தப்பட்ட அந்தப் பகு திக்குள் திடீரென ஒரு கார் மின்னல் வேகத்தில் பாய்ந்து வெடித்தது. இதில் 12 பேர் உடல் சித றிப் பலியானார்கள்; ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். இறந்தவர்களது உடல் பாகங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

6 ஆவதாகவும் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. ஆனால, பலியானவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய விவரம் தெரியவில்லை. ஈராக் நாட்டில் 8 லட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலா னவர்கள் பக்தாத் நகரில் வசிக்கிறார்கள். அவர் களில் பலர் மது விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது தான் கடந்த சில வாரங்களாக இப்படிப்பட்ட தாக்குதல்களை ஈராக்கியர்கள் நடத் திவருகின்றார்கள். ஈராக்கில் உள்ள இஸ்லாமியர் கள் குறிப்பாக சுனி மற்றும் ஷியா பிரிவினருக்கும, கிறிஸ்தவர்களுக்கும் இடையே மோதலை உருவாக்கத் திட்டமிட்டு தாக்குதல் நடத்தப் பட்டதாக சம்பவத்தை நேரில பார்த்தவர் கூறினா.

## ஆயுத இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் விவகாரம்: ஐக்கிய நாடுகள் தீர்மானத்தை நிராகரித்தது சூடான்

கார்டோம்,ஓக.3

சூடானில் அரசுக்கு ஆதரவாகச் செயறபடும் ஆயுதம் தாங்கிய இயக்கங்களை (ஜஞ்சாவீட்) ஒரு மாதத்திற்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை இயற்றியுள்ள தீமானத்தை அந்நாட்டு அரசு கடுமையாக விமர்சித்துள்ளது.

சூடானில் நடைபெறும் கொடுஞ் செயல்க ளுக்கு முக்கிய காரணமாக அரசுக்கு ஆதரவான ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் இருக்கின்றன.

இவற்றை ஒரு மாதத்திற்குள் கட்டுப்படுத்த வேண்டும். தவறினால் அந்நாட்டின் மீது சர்வதேச நடவடிக்கைகள் தொடங்கும் என்று ஐக்கிய நாடு கள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானம் குறித்து கருத்துத் தெரிவித்த சூடான் அரசின் செய்தித் தொடர்பாளர் அல்ஜ ஹாவி இப்ராஹிம் மாலி கடந்த வெள்ளிக்கிழமை கூறியதாவது:-

ஐநாவின் தீமானம் சரியானதல்ல. சூடானில நெருக்கடியைத் தீர்க்க அரசும் ஆபிரிக்க யூனிய னும் அரபு லீக்கும் செய்து வரும் முயற்சிகளை அத்தீர்மானம் கவனத்தில் கொள்ளவில்லை.

அரசுக்கு ஆதரவாகச், செயற்படும் ஜஞ்சா வீட் இயக்கத்தின் மீது ஐ.நா. தீமானம் அதிக கவனம் செலுத்துகின்றது. பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்யும் திட்டங்கள், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற் படுத்தும். அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் ஆகியவற்றை அத்தீமானம் கண்டு கொள்ளவில்லை.

சூடான் மீது சர்வதேச நடவடிக்கைகள் தொடங் கும் என்று கூறப்பட்டுள்ளது. இது போன்ற மிரட் டல்களை சூடான் நிராகரிக்கிறது. எங்கள் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வலிமை எங்களுக்கு உண்டு. சூடானுக்கு எதிரான சக்திகளின் சதிகளை யும், நாட்டின் பொருளாதார வளங்களின் மீது பேராசை கொண்டவர்களின் சூழ்ச்சிகளையும் எதிர்க்கும் சக்தி எங்களுக்கு உள்ளது.

சூடான் அரசுக்கும் ஐநா. சபைக்கும் ஜூலை 3 இல் ஏற்பட்ட ஒப்பந்தத்துடன் ஐ.நா. தீமானம் முரண்படுகின்றது - என்றார்.

சூடானின் தர்பாரில் நடைபெற்ற உள்நாட் டுப் போரும் கொடுஞ் செயல்களும் அண்மையில் ஏற்பட்டுள்ள முக்கிய நெருக்கடி என்று ஐ.நா. தீர்மானம் குறிப்பிட்டுள்ளது. இந்தக்கலவரங்க ளில் 50 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். பத்து லட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள் ளனர். (8)

## அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஜோர்ஜ் புஷ் தீவிர பிரசார நடவடிக்கை

கேம்பிரிட்ஜ்,ஓக.3

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், தேர்தல் வெற்றிக்காகப் பஸ் பயணம் மேற்கொண்டு பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி நடைபெற விருக்கிறது. குடியரசுக் கட்சி சார்பில் தற் போதைய அதிபர் புஷ் மீண்டும் களமிறங்கி யுள்ளா. அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் ஹெரி போட்டியிடுகி றார். தோதலுக்கு இன்னும் மூன்று மாதங் கள் இருந்தபோதிலும், இப்போதே பிரசார களம் சூடாகிவிட்டது. அதிபர் புஷ், கிளீவ லேண்டில் தெற்கு பிட்ஸ்பார்க் வழியாக பென்சில்வேனியா நகரம் வரை பஸ் பயணம் மேற்கொண்டார். 11 மணி நேரம் 250 கிலோ மீற்றர் பயணம் செய்த அவர் ஏழு இடங்களில் இறங்கி பிரசாரம் செய்தார்.



ஒகியோ மாநிலத்தில் அவர் பிரசாரம் செய்த போது கடும் மழை கொட்டியது. அவர் பேசுகை யில், அமெரிக்க பொருளாதாரம் பலமாக வளர்ந்து வருகிறது. ஆனால், ஒகியோ மாநிலம் இன்னும் வளரவேண்டும். குறிப்பாக, கிழக்குப் பகுதியில் இன்னும் வளர்ச்சியில்லை - என்றார்.

அவர் பிரசாரம் செய்த அரங்கிற்கு வெளியே திரண்ட ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் அதி பர் புஷ் ஒரு பொய்யர். அமெரிக்கர்களுக்கு உள நாட்டிலேயே வேலை வாய்ப்பைப் பெருக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் அதிபரே நமக்குத் தேவை என வாதிட்டனர்.

## அமெரிக்காவின் பாரிய நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த அல்கெய்டா இலக்கு!

நியூயோர்க்,ஓக.3

நியூயோர்க் நகரில் தலைமைக் காரியாலயங் களை அமைத்துள்ள பாரிய கூட்டுத்தாபனங்க ளின் மீது தற்கொலைத் தாக்குதல்களை நடத்து வதற்கு அல்கெய்டா இயக்கம் திட்டமிட்டு வரு வதாக ஏ.பி.ஸி. செய்தி நிறுவனம் தெரிவிக் கின்றது.,

அமெரிக்க மத்திய அரசு அதிகாரிகளும், நகராட்சி அதிகாரிகளும் தெரிவித்த நம்பகர மான புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படை யில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என்றும் ஏ.பி.ஸி. கூறுகின்றது.

தாக்குதலுககு இலக்கு வைக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் வோல்ட்ஸ் ஸ்வீட் நிறுவனமும் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டுகள் ஏற்றப்பட்ட ஒன்று அல்லது இரண்டு 'ட்ரக்' வண்டிகளைச் செலுத்திச் சென்று வெடிக்க வைப்பதன் மூலம் இந்தக் தாக்குதல்கள் நடத் தப்படலாம் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதால் அதிகாரிகள் குழப்பமடைந்துள் ளனர். இந்த விடயம் குறித்து உள்ளூர் அதிகாரிக ளும், மத்திய அதிகாரிகளும் கூடி ஆராய்ந்துள ளனர். அமெரிக்காவில் அமைந்துள்ள வர்த்தக நிதி நிறுவனங்கள் மீதும், சர்வதேச நிறுவனங் களின் மீதும் அல்கெய்டா இயக்கம் இலக்கு வைத்துள்ளது என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஐ-க)

## ஆக்கத்திறன் போட்டிகள்

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டிகள் இம்மாதம் 7 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன

சமூகக்கல்வி பாடம் கற்பிக்கின்ற 15 பாடசாலைகள் இப்போட்டி களில் பங்குபற்ற உள்ளன. (10-152)

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி தனது 65 ஆவது வருட பூர்த்தியினை முன்னிட்டு நிலையான வைப்புக்களுக்கு 1% அதிகரித்த வட்டியினை வழங்குகின்றது. (7+1=8%) என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இவ்வதிகரிப்பு 31.08.2004 வரை செல்லுபடியாகும்.

02-08-2004 (சி.36404)(43) உதவிப் பொது முகாமையாளர். (வடபிராந்தியம்), யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மாதரசியாக 08 09 1918



விண்ணில் வீடுவெள்ளியாக 14 08 2003

**திருமதி சிவசுப்பிரமணியம் கோசலையம்மா**

திதி: 03-08-04 திருதியை

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு
அணைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
நொடிப் பொழுதில் எம்மைவிட்டு
மறைந்த துயரமும் நினைவும்
என்றென்றும் எம்மை விட்டு அகலாது!

இன்று (03-08-04) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஊரிக்காடு, வல்வெட்டித்துறை,*
*ராஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.*
*சுப்பிரமணியம் சோடாக் கம்பனி ,*
*வல்வெட்டித்துறை.*

என்றும் உங்கள் நினைவுடன்
மக்கள், மருமக்கள்,
(சி-36402)(16-18-32) பேரப்பிள்ளைகள்

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.3

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. கிழககு பிரதேச சபையால் நடத்தப்படும் சனசமூக நிலையங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

★பிற்பகல் 3.30 மணிக்கு புத்தூர் கலைமதி ச.ச. நிலைய அணி எதிர் ஊரெழு பாரதி ச.ச. நிலைய அணி.

★ மாலை 4.30 மணி ஆவரங்கால் கலையகம் ச.ச.நிலைய அணி எதிர் உரும்பிராய் சரஸ்வதி நிலைய அணி

(எ-5)

## தேவை

காசாளர், விற்பனையாளர், பில்கிளாக், கணக்காளர், விற்பனைப்பிரதிநிதி தேவை. நேரில் ஆவணங்களுடன் வரவும்.

**பேப்பர் ஹவுஸ்**

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சிவா வீடியோ லைபிறறியின் ஆடி மாத T.V அதிர்ஷ்டம்

T.Vபெற்ற அதிர்ஷடசாலி - கோபாலப்பிள்ளை (ஊழியர் கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்)

ஆறுதல் பரிசுகள்:- விஸ்ணுதாஸ், கொண்மட் றோட், அகிலன் - நல்லூர், ராயு-முதிரைச் சந்தி, திலக்-தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, ஜெயந்தன்-முடமாவடி, சுஜிவன்-நல்லூர், Dr. சுரேஸ் குமார்-யாழ். போதனா வைத்தியசாலை

(34838)

## தேவை

சாறி பிளவுஸ் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. சம்பளம் பேசித் தீமானிக்கப்படும். நேரில்தொடர்புகொள்ளவும்.

S.M.N.தையலகம்,
*முதலாம் ஒழுங்கை, நெல்லியடி.*
(34832) உரிமையாளர்: **நாதன்**

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணி நிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01) பணிநிலை : பண்ணை முகாமையாளர் (தரம் 03)**

தகைமை : ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்விநிறுவனமொன்றின் பொருத்தமான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது ஏழு (07) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

அகவை : 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

மாதாந்த ஊதியம் : $\frac{8,000\text{-}12,000}{200 \times 20} + 4,000$

**02) பணிநிலை: பண்ணை மேற்பார்வையாளர் (தரம்-03)**

தகைமை : பண்ணை மேற்பார்வை தொடர்பில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவு உடையவராக இருக்கவேண்டும்.

அகவை : 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

மாதாந்த ஊதியம் : $\frac{6,000\text{-}9,000}{150 \times 20} + 4,000$

மேற்காட்டப்பட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு 2004/08/11 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01) கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02) ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04) நற்சாட்சிப் பத்திரங்கள்

**மேலாளர்,**
**ஆளுகைப் பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழவைப்பகம்.**

(சி-36703)(16-18-32)

## எழுத்துப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விணணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பாட்சை 6 ஆம் திகதி காலை 9மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

(எ-117)

## யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கான அவசர வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப்பட்டதாரிகளும் (பத்திரிகையில் பேர் வந்தவர்கள் உட்பட) தங்கள் பட்டம் செல்லுபடியாகும் காலத்தினை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதால் (Statement) 03.08.2004 காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை மட்டும் தத்தம் பிரதேச செயலகத்திற்குச் சென்று அங்கு நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளிடம் பதிவுகளை மேற்கொள்ளவும். த்விர்க்க முடியாத காரணத்தால் விண்ணப்பதாரி வரமுடியாதுவிடின் அவரது உறவினர்கள் வருகைதந்து பட்ட திகதிகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- சங்க செயலாளர்

(34842)(43-16-18-32)

## யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய சாதனை வீரனைப் பாராட்டுகின்றோம்.



கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி வாசியும் இவ்வித்தியாலய மாணவனுமாகிய செல்வன் வேலுப்பிள்ளை சசிகரன் வடக்கு-கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் ஈட்டி எறிதலில் 49.23 மீற்றர் தூரத்தை எறிந்து முதலாம் இடம்பெற்று புதிய சாதனை படைத்தமைக்குப் பாராட்டுவதோடு, இத்துறையில் மேலும் இவர் வல்லுநராக வளரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

(34840)(16-18-32) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் ஆச்சிமுத்து .

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் ஆச்சிமுத்து 01.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் காலமானார்.

அன்னார் தில்லையம்பலம் பொன்னம்பலம் (சின்னையா) அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான செல்லத்துரை, செல்லாச்சிப்பிள்ளை, சரவணமுத்து, கதிரவேலு மற்றும் சேனாதிராஜா, நாகம்மா, தங்கம்மா, பூரணம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகலிங்கம், இராசமணி மற்றும் தவமணி ஆகியோரின் தாயாரும் சண்முகநாதனின் மாமியாரும் சலசா (கொழும்பு), கிரிஜா (ஆசிரியர்), கிருபாகரன் (கனடா), இராமநாதன், தர்சினி ஆகியோரின் பேர்த்தியும் துஷாளி, கரிசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2004) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நீர்வேலி வடக்கு,* ச.சண்முகநாதன் (மருமகன்)
*நீர்வேலி,* (34839)(34-16-18-32) (ஓய்வுபெற்ற கூட்டுறவு உத்தியோகத்தர்).

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் திங்கட்கிழமை, ஓகஸ்ட்-02-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,461.42 | 1,454.36 | 7.06 | 0.49 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,187.87 | 2,192.39 | (4.52) | (0.21) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) | | | | |
| ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,510.16 | 1,502.87 | 7.29 | 0.49 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,270.73 | 2,275.42 | (4.69) | (0.21) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 485.3 | 469.6 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 62.7 | 43.3 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 7,728 | 6,941 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 357.8 | 356.1 | | |
| **நயமுற்ற அதி 5 கம்பனிகள்** | இன்றைய நி.ச.இ.விலை | முந்திய நி.ச.இ.விலை | மாற்றம் (ரூபாயில்) | |
| COL PHARMACY 5/= | 250.00 | 169.50 | 80.50 | |
| BLUE DIAMONDS (Non Voting) | 4.00 | 2.75 | 1.25 | |
| LANKEM DEV | 17.50 | 12.50 | 5.00 | |
| MULLERS | 8.00 | 6.00 | 2.00 | |
| COLOMBO LAND 1/= | 6.75 | 5.25 | 1.50 | |
| **நட்டமுற்ற அதி 5 கம்பனிகள்** | இன்றைய நி.ச.இ.விலை | முந்திய நி.ச.இ.விலை | மாற்றம் (ரூபாயில்) | |
| SATHOSA MOTORS | 34.00 | 44.00 | (10.00) | |
| NDB BANK | 28.00 | 30.75 | (2.75) | |
| BROWNS 8/- | 325.00 | 355.00 | (30.00) | |
| DIPPED PRODUCTS | 110.00 | 118.25 | (8.25) | |
| MAHAWELI REACH | 21.50 | 23.00 | (1.50) | |

**இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்**

| கம்பனி பெயர் | பங்கிலாபம் (%) | XDதிகதி | அனுப்பும் செலுத்துகை |
|---|---|---|---|
| கார்கோ போட் டெவலப்மென்ட் | 5% | முதலும் கடைசியும் | திகதி பின்னர் அறிவிக்கப்படும். |
| ரேணுக சிட்டி ஹொடேல் | 50% | கடைசி | திகதி பின்னர் அறிவிக்கப்படும். |

**இன்றைய முன்னுரிமைப் பங்கு வழங்கல்கள்**

| கம்பனி பெயர் | விகிதம் | XRதிகதி | காலாவதி |
|---|---|---|---|
| ஹொடேல் சீகிரிய | 02 இற்கு 01 | அங்கீகாரத்தின் பிரகாரம் | |

(வழங்கல் விலை ரூ.30, ஹொடேல் அபிவிருத்தி நடவடிக்கைக்குப் பயன்படும்)

★குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை. (C/36405) (40-17-12)

# இயற்கை (மூலிகை) வைத்தியம்

இயற்கை மூலிகை வகைகள் மற்றும் யோகாசன சிகிச்சைகள் மூலம் தீராத தோல் நோய்கள், ஆண் மைக்குறைவு, ஆஸ்துமா, உடல்பருமன், தலைமுடி உதிர்தல், நாரி உழைவு, கை, கால் விறைப்பு, மூலவியாதிகள், வாதம், தலையிடி, மாதவிடாய் பிரச்சினைகள், வெள்ளைபோதல், குடிவெறி போன்றவைகள் முற்றிலும் குணமாக்கலாம். எக்ஸிமா, சொரியாஸிஸ் மற்றும் இதர தோல் நோய்கள் எந்த நிலையில் இருந்தாலும் குணமாக்கலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

**Dr.R.K. நவநீதன்**

DYNS:SMP, NC

(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)

54, மணிக்கூட்டு வீதி (யாழ். பயணியர் விடுதி)

(வெலிங்ரன் சந்தி -முனீஸ்வரா கபே அருகில்)

யாழ்ப்பாணம்.

இம்மாதம் 3 ஆம் திகதி முதல் 18 ஆம்திகதி வரை யாழில் சந்திக்கலாம்.

(34848)(36-13-14)

## யோகாசன வகுப்புப் பதிவுகள் நடைபெறுகின்றன


# முதலாம் வருட நினைவுகளில்...



ஜனனம் 26 ★ 08 ★ 1941

மரணம் 15 ★ 07 ★ 2003

**அமரர் தம்பிஜயா சிவராஜா**

ஆண்டு அது சுபானு ஆடி பதினைந்தில்
மீண்டும் திரும்பா பயணம் எய்து - தாண்டி
எல்லை சாம்பலில் தந்தை உதிர்ந்தாலும்
இல்லை இந்த மரணம் பொய்!

என்றும் உங்கள் நினைவுள்ள
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*நாவற்குழி மேற்கு,*
*கைதடி.* (34847)(36-13-14)

# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1934 - 07 - 31

மறைவு 2004 - 06 - 20

## திருமதி தங்கரெத்தினம் தங்கராசா (ரெத்தினம்)

**2004.06.20 ஞாயிற்றுக்கிழமையன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி தங்கரெத்தினம் தங்கராசா (ரெத்தினம்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (2004.08.03) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

மக்கள் . மருமக்கள். பேரப்பிள்ளைகள்.
புங்குடுதீவு - 2
இல.09. கஸ்தூரியார் வீதி
(34846)(36-14-13) முதலாம் ஒழுங்கை. யாழ்ப்பாணம்.

# ஞானவைரவர் ஆலயத்தில் காண்டாமணி திருட்டு

கைதடி,ஓக.3

கைதடி மேற்கு ஞானவைரவர் ஆலயத்தில பாவனையில் இருந்த காண்டாமணி திருட்டுப் போய்விட்டது.

மிகப் பழைமை வாய்ந்ததும் மிகப் பெறுமதி மிக்கதுமான இக்காண்டாமணி ஆலய வாயிலில இருந்த சமயமே இரவுவேளை உள்நுழைந்த திருடர்கள் இதனை அபகரித்துள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

இத்திருட்டுச் சம்பந்தமாக சாவகச்சேரி பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

யாழ். குடாநாட்டில் ஏ9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட நாள் தொடக்கம் இவ்வாறான புராதன பெறுமதி வாய்ந்த பொருள்கள் ஆலயங்களில் திருடப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

(எ-75)

# பேராதனை பல்கலையில் கல்விசாரா ஊழியர் பகிஷ்கரிப்பு

கொழும்பு,ஓக.3

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியே அவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

வேலைநிறுத்தம் பற்றித் தமக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை எனவும், கல்விசார ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரத் தாம் தயாராக இருக்கின்றார் எனவும், இதுவரை கல்விசாரா ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் எவரும் தம்முடன் பேச்சு நடத்த முன்வரவில்லை எனவும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கபில குணசேகர தெரிவித்தார்.

(க)















# மரண அறிவித்தல்

## இராசையா திருஞானம்

வேலணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த இராசையா திருஞானம் நேற்று (02.08.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் சீவரெத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திருப்பதியின் அன்புக் கணவரும் ஞானேஸ்வரன், அமிர்தன், அமிர்தினி (மாணவி, சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம், வேலணை), அயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருச்செல்வம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சுவதேவன், பரசசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தங்கரெத்தினம், சீதாலெட்சுமி, பூபதி மற்றும் சிவாநந்தநாயகி காலஞ்சென்றவர்களான செவ்வேள், சிவலிங்கம் மற்றும் பகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2004) செவ்வாய்க்கிழமை 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு,*
*வேலணை.* (34852)(36-13-14)

தகவல்:
தி.ஞானேஸ்வரன்
(மகன்).


**University of Jaffna, Sri Lanka**
**Disciplinary Inquiry Officers**

Applications are invited by me upto 09.08.2004 from Public officers/Retired Public Officers/ Retired Officers From University Services who have experiences in system of administration and holding inquiries.

Those who are intended to apply are requested to furnish their full name, address and contact Telephone Number, designations (at the time of retirement) with experience to the Vice - Chancellor, University of Jaffna, on or before the above date.

Vice - Chancellor
02.08.2004 (36403)(36.14-13)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி தங்கம்மா கந்தையா

தோற்றம் 07 - 01 - 1937
மறைவு 04 - 07 - 2004

**எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இன்று (03.08.2004) செவ்வாய் அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கம்பனி வைரவர் கோவில் லேன்,
கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடி.

- குடும்பத்தினர்.
(34851)(40-13-14-36)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா தில்லைநாயகி



நயினாதீவு, 8 ஆம், வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா தில்லைநாயகி 31.07.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு நயினாதீவில் இடம்பெறும்.

குறிப்பு:- நேற்று (02.08.2004) திங்கட்கிழமை நடைபெற இருந்த அன்னரது இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் இடம்பெறவில்லை.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8 ஆம், வட்டாரம்,*
*நயினாதீவு.* (34849)(36-13-14)

தகவல்:
ந.செல்வநாதன்
(மகன்).

## திருமதி மகேஸ்வரி அழகரட்ணம்

மானிப்பாய், மூனாமலை ஒழுங்கையில் வசித்து வந்த திருமதி மகேஸ்வரி அழகரட்ணம் 01.08.2004 ஞாயிற்றுக்கிழமை தென்னிந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் அல்பேட் அழகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, சிவசம்பு, சிவக்கொழுந்து மற்றும் சிவபாதம், சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரவதனி, அற்புதவதனி, சரவணபவன், கமலினி, மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 186, வெள்ளாளந்தெரு, புரசைவாக்கம் சென்னையில் நாளை (04.08.2004) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.* (சி.36406)(36-13-14)

தகவல்:
அ.சரவணபவன்
(மகன்).

## திருமதி ஐயாத்துரை செல்லம்மா



முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் 63, பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை செல்லம்மா நேற்று (02.08.2004) திங்கட்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - இலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் (வேலணை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் இராசமணி (கிளி), தவராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பியப்பா மற்றும் சிவராசா, சறோஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் அரவிந்தன் - யசோதா (கனடா) , சுரேஷ் ( Doctor, Castle hospital, Borrella), சிவாஜினி - கிரிதரன் (கனடா), உஷாந்தி - யோகராசா (கனடா), துஷ்யந்தி - பாஸ்கரன் (கனடா), காயத்திரி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆதித்தியா, ஆரண்யா, அபிஷேக், அர்ச்சிகா, பாதுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற செல்லத்துரை, கந்தையா, பார்வதி, தனபாக்கியம், நவரெத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2004) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*63, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (34845)(36-13-14)

தகவல்:
ச.சிவராசா
(மருமகன்).

# அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முஸ்தீபு

கொழும்பு,ஓக.3

சமாதான முயற்சியின் தேக்கநிலை, விலைவாசி அதிகரிப்பு , வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வு, தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை போன்றவற்றுக்கு ஆட்சேபம் தெரிவித்து நாடு முழுவதிலும ஆர்ப்பாட்டங்களை நடத்த ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னேற்பாடாகக் கட்சியை புனரமைத்து முக்கிய பொறுப்புகளை இளைஞர்களிடம் கையளிக்கவும், அக்கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளது.

கட்சியை புனரமைக்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். ஒக்ரோபர் மாதம முதல் நாட்டின் பரவலான ரீதியில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கு மக்களை அணிதிரட்டும் பணி கிராம மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாகத தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் முக்கிய பொறுப்புக்களுக்கு பல புதிய முகங்களை நியமித்து கட்சிக்குப் புத்துயிர்ப்புக் கொடுக்க அக்கட்சியின் உயர் பீடம் தீர்மானித்துள்ளது.

கடந்த தேர்தல்களில் ஐ.தே.கவுக்கு ஏற்பட்ட பின்னடைவை சீர்செய்வதற்காகப் புதிய திட்டங்களை வகுத்துச் செயற்படவும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அறிவிப்பு

## விடுதலைப் புலிகள் விடுத்தனர்

மட்டக்களப்பு,ஓக.3

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருக்கும் பொதுமக்கள் அவற்றை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் என்று பி.பி.ஸி. தமிழோசை நேற்றிரவு தெரிவித்தது.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் தேசவிரோதக் குழுவுடன் தொடர்புடைய மூன்று பேர் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என்று புலிகள் தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்தே புலிகளிடமிருந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

# சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள்: 50 பொலீஸார் மீது வழக்குகள்!

தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபர்களை இம்சைப்படுத்தியவர்கள் எனக் கூறப்படும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் 50 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

சித்திரவதைகளுக்கு எதிரான சட்டத்தின் கீழ் அவர்கள் மீது குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதக் கைது, சட்டவிரோதத் தடுத்து வைப்பு, சித்திரவதைகள் என்பனவே அவர்கள மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளாகும்.

இவ்வழக்குகள் யாவும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி தலைமையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரத்தியேகப் பிரிவினரால் கையாளப்படுகின்றன.

எந்தவொரு பொலீஸ் அதிகாரியோ, இராணுவ வீரரோ மனித உரிமைகளை மீறினார் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால், இந்தப் பிரிவினூடாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க-9)

# நிமாலின் நினைவுகளுடன் விடைபெறும் செய்தியாளர்

கடந்த நான்கு ஆண்டுகளாக பி.பி.ஸியின் இலங்கைக்கான விசேட செய்தியாளராகப் பணியாற்றிய திருமதி பிரான்சிஸ்ஹரிசன் இங்கிருந்து செல்கின்றார். அவர் ஈரானில் பி.பி.ஸியின் செய்தியாளராகப் பணியாற்றவுள்ளார்.

இலங்கையை விட்டுச் செல்வது குறித்து அவர் கூறுகையில்-

படுகொலை செய்யப்பட்ட மயில்வாகனம் நிமலராஜனும் அவரது குடும்பத்தினரும் தனது வாழ்வில் மறக்கமுடியாத இடம் பிடித்துக்கொண்டனர் என்றும் -

நிமலராஜனின் நினைவுடனேயே தான் இலங்கையைவிட்டுப் புறப்படுகிறார் என்றும் - தெரிவித்துள்ளார்.

நிமலராஜன் பி.பி.ஸியின் யாழ்.பிரதேச செய்தியாளராகப் பணியாற்றினார் என்பது தெரிந்ததே

## புளொட் மோகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதி முதல் குறிப்பிட்ட விடுதியில் தங்கியிருந்தாரெனப் பொலீஸார் கூறுகின்றனர்.

இந்தக் கொலையை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் மேற்கொண்டிருக்கலாம் என்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஒ-9)

## மாநகரசபை ஆணையாளர் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.மாநகரசபையின் புதிய ஆணையாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கலாநிதி க.குணராஜா நேற்றுத் தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ்.மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி வந்த இ.இராமலிங்கம் திருகோணமலையில் உள்ள மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு இடம்மாற்றம் பெற்றுள்ளார்.

இதனையடுத்தே கலாநிதி க.குணராசா மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டார். தெல்லிப்பழைப் பிரதேச செயலாளராகக் கலாநிதி குணராஜா முன்னர் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (ஒ-6)

## காணிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான காணிப்பிணக்குகள் உருவாகியுள்ளன. இவ்வாறு யாழ்.அரச அதிபர் இந்த மாநாட்டில் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், யோசனை ஒன்றையும் அவர் முன்வைத்தார். இதன்படி, பிரதேச ரீதியாக வரைபடங்கள் தயாரிக்கப்படும். அவற்றில் காணிகள், வீதிகள், ஒழுங்கைகள், நீர்நிலைகள், வழிபாட்டிடங்கள் உட்பட ஒரு பிரதேசத்தில் உள்ள அனைத்து நிலக் குறியீட்டுகளும் உள்ளடக்கப்படும். இதில் காணிகள் ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேக இலக்கங்கள் வழங்கப்படும். இந்த இலக்கங்களின் அடிப்படையிலேயே பதிவாளர் அலுவலகத்தில் காணி உறுதிகள் பதிவுசெய்யப்படும்.

இந்தத் திட்டம் ஏற்கெனவே வெளிநாடுகள் சிலவற்றில் மட்டுமன்றி, தென்னிலங்கையில் உள்ள மூன்று பிரதேசச் செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் -

அதற்கு உலக வங்கி நிதி உதவி வழங்குவதும் - அமைச்சரிடம் யாழ்.அரச அதிபரால் எடுத்துக் கூறப்பட்டது.

இதுதொடர்பாக அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தத் திட்டம் குறித்து காணி அமைச்சருடன் பேசி தென்னிலங்கையைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ஒ-3-9)

## யாழ்.செயலகம் முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தற்போது ஆட்சிப்பீடம் ஏறியதும் நியமனங்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

முதற்கட்டமாக 17 ஆயிரம் பேருக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. நியமனம் பெறுவோரின் பெயர்ப் பட்டியல் வெளியானதை அடுத்தே தமிழர்களும், முஸ்லிம்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியவந்தது.

அதனை ஆட்சேபித்தே மக்கள் எதிர்ப்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

### யாழ்ப்பாணத்தில்...

பட்டதாரிகளுக்கு அரச சேவையில் நியமனம் வழங்கும் விடயத்தில் யாழ்.மாவட்டத்திற்கு இழைக்கப்பட்டுள்ள பாரபட்சத்தைக் கண்டித்து யாழ்.மாவட்த்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் நேற்று யாழ். செயலகம் முன்பாக இருமணி நேர அடையாள மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் காலை 8.30 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை இந்த அடையாள மறியற்போராட்டம் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட உயர் தேசியக் கணக்கியல் முகாமைத்துவ வர்த்தகப் பட்டதாரிகள் உட்படப் பல நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் இதில் கலந்துகொண்டு தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், செ.கஜேந்திரன், கே.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் மறியற்போரில் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

மறியல் போரின் முடிவில் பட்டதாரிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின செயலாளர் என்.பிரபாகரன யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கையளித்தார்.

மறியற்போராட்டம் காரணமாக செயலக ஊழியர்கள் எவரும் செயலகத்துக்குள் செல்ல முடியவில்லை. இதனால், கடமைக்கு வருகை தந்திருந்த யாழ்.செயலக உயர் அதிகாரிகள் உட்பட சகல அலுவலர்களும், பொதுமக்களும செயலகத்திற்கு வெளியே வீதியோரங்களில் நின்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த அடையாள மறியற்போராட்டத்தை இரண்டு மணித்தியாலங்களுடன் முடிப்பதாக ஏற்பாட்டாளர்கள் முன்னர் தெரிவித்திருந்தனர். ஆனால், தமது கோரிக்கை தொடர்பாகச் சாதகமான பதில் கிடைக்கும்வரை தொடர்ந்தும் மறியலை மேற்கொள்ளப் போகிறார்கள் எனப் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

இருந்தபோதும் யாழ்.மாவட்ட அரச அதிபர், பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் முக்கிய சந்திப்பை மேற்கொள்வதற்கு ஏதுவாக, போராட்டத்தை நிறுத்தி ஊழியர்களையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் செயலகம் செல்லுவதற்கு அனுமதிக்குமாறு கோரப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் முயற்சியால் குறிப்பிட்ட நேரத்திற்கு சற்றுப் பிந்திப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

### அம்பாறையில்...

பட்டதாரித் தொழில் நியமனங்களில் தமிழ், முஸ்லிம் பட்டதாரிகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து நேற்று திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தனர்.

அம்பாறைக் கரையோரப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் பாடசாலை எதுவும் இயங்கவில்லை. பொதுசந்தை, கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அரச காரியாலயங்கள், வங்கிகள் எவையும் செயற்படவில்லை.

கல்முனை மாவட்ட நீதிமன்றம்கூட இயங்கவில்லை. நேற்று 2 ஆம் திகதி விசாரிக்கப்படவிருந்த வழக்குகள் யாவும் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது.

பஸ் போக்குவரத்து இடம்பெறாததால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பல்வேறு இடங்களில் வீதித்தடைகள் போடப்பட்டிருந்தன.

விசேட அதிரடிப் படையினரும் பொலீஸாரும் வீதிக்கு வீதி நிறுத்தப்பட்டிருந்தனர். ரோந்து நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனா.

ஹர்த்தாலின்போது மருதமுனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியில் சென்ற வாகனங்கள் மீதும் இராணுவத்தினர் மீதும் கற்களை வீசியதால் ஆத்திரமுற்ற படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் நடத்தி ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தாக்குதலில் காயமடைந்த பட்டதாரி ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இராணுவத்தினரும், பொலீஸாரும் வீதித் தடைகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்தனர். அசம்பாவிதங்கள் எதுவும் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

### ஆரையம்பதியில்..

ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் ஒருவர்தானும் பட்டதாரி நியமனத்தில் உள்ளடக்கப்படாததைக் கண்டித்து நேற்றுக் காலை பிரதேச செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிரதேச செயலக பிரதான வாயிலை மூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், அதிகாரிகளும் அலுவலர்களும் உள்ளே நுழைய முடியாதவாறு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால், பிரதேச செயலக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. அலுவலர்கள் செயலக வளாகத்தில் குழுமி நின்றதை அவதானிக்க முடிந்தது.

இது தொடர்பாக மாவட்ட அரச அதிபருடன பேச்சு நடைபெற்றது.

(க-3-5-14-31-88-117-139)

## ஆணையாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

தற்கொலைக் குண்டுதாரி என்று கூறப்படும தியாகராஜா ஜெயராணி மற்றும் அவரது உதவியாளரான சத்தியலீலா செல்வக்குமார் ஆகிய இருவருக்கும் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர்களின் விசேட அவசர உத்தரவு ஒன்றின பேரிலேயே அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-9)

## வல்வைப் படு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேற்றனர். ஊர்வலம் தீருவில் மைதானத்தை அடைந்ததும் திறப்புவிழா நிகழ்வு ஆரம்பமானது. அங்கு வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா பொதுச்சுடரையும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தமிழீழத் தேசியக் கொடியையும் ஏற்றினர். கடற்புலிகளின் மகளிர் பிரிவுத் தளபதி மதிவதனி நினைவுத்தூபியை திரைநீக்கம் செய்தார். கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி மாலை சூடி மலரஞ்சலியை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து போராளிகளும் பொதுமக்களும் நினைவுத்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து நினைவுக் கூட்டமும் படுகொலையுண்டோர் நினைவு உதைபந்தாட்டப் பரிசளிப்பு ஆகியவை இடம்பெற்றன. வல்வை படுகொலைச் சம்பவத்தில் படுகாயங்களுடன உயிர்தப்பியவரான கோ.கணாநந்த ராசா இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-70-36-173)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடி வலைகள் சேதமாக்கப்பட்டும் வருகின்றன.

இதுகுறித்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நேரடியாகப் படகில் சென்று இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்தினர். எனினும், தாம் இக்கடற்பரப்பில் சங்கு, நண்டு மட்டுமே பிடிக்கிறார்கள் என இந்திய மீனவர்கள் தெரிவிக்கின்றனர் என்று சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு மீனவசங்கப் பிரதிநிதிகள் இந்திய மீனவர்களை கோரினர் எனவும், அது பயனளிக்கவில்லை எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி உபகார நீற்றா கொலின்ஸ் (ராணி)



ஊர்காவற்றுறை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி நீற்றா கொலின்ஸ் நேற்று (02.08.2004) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் வில்லியம் கொலின்ஸ் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சேவியர், அல்லின் துரைசிங்கம் மற்றும் பிலோமினா றோஸ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயந்தி (கனடா), றொயிஸ் (கனடா), அருட்தந்தை சாள்ஸ கொலின்ஸ் (இயக்குநர், இளையோர் அன்பியம், யாழ்.மறை மாவட்டம்), நீற்றா, சுரேஸ் (கனடா), குயின்ரஸ், டெலிற்றா ஆகியோரின் அன்புத் தாயாரும் சிலுவைமுத்து அன்ரன் (கனடா), அனன்சியா (கனடா), நோயல் (கட்டார்), சகானா (கனடா), ஜோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முதல் இறுதி அஞ்சலிக்காக ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 07.08.2004 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக கனத்தை (பொறல்ல) பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்.*
(சி.36408)(40-12-17)

தகவல்:
வில்லியம் கொலின்ஸ் (கணவர்),
அருட்திரு.சாள்ஸ் கொலின்ஸ் (மகன்).

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

கலையகம் ஆவரங்கால்
தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
யாழ்.பிரபல ஆசிரியர்.
ஆரம்பம்: 04.08.2004 புதன் 6 p.m.

BARATHY
சித்தன்கேணி
பொருளியல்
-திரு.உதயன்
A/L 2005
அலகு ரீதியான
PAPER CLASS
புதன், வியாழன்
3.30 - 5.00 (ப.நே.)
ஆரம்பம்:
04.08.2004 புதன்.
A/L 2006
புதன், வியாழன்
5.00 - 6.00
(ப.நே.)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.